பக்கங்கள்-16 | 27.பங்குனி.2022 | விலை–40.00





# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –378



# குடும்ப அரசியலின் கோமாளிக் கூத்துக்கள் குழப்பத்தில் மக்கள்



# ஜனாசாக்களை கதறக்கதற எரித்த சாபத்தையே இந்த ஆட்சியாளர்கள்அனுபவித்து வருகிறார்கள் – ரவூப் ஹக்கீம்



# சர்வகட்சி மாநாடும், கட்சிகளின் புறக்கணிப்பும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு சாத்தியமா?

# குடும்ப அரசியலின் கோமாளிக் கூத்துக்கள் குழப்பத்தில் மக்கள்

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்டு பெரும்பான்மையாக வாழும் சிங்களவர் ஒருவரே இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் இதுவரை காலமும் தெரிவுசெய்யப்பட்டு பதவியில் அமர்ந்திருக்கிறார்கள். இனிவரும்காலங்களும் சிங்களவர் ஒருவரைத் தழுவியே இப்பதவிகள் செல்லும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இலங்கையினுடைய அரசியல் என்பது அனைத்துக் காலகட்டங்களிலும் குழப்பங்களாலேயே நிறைந்து காணப்படுகிறது. தென்னிலங்கையினது அரசியல் களம் எப்போதும் கொதி நிலையில் தான் இருக்கிறது.

இலங்கை அரசியலில் குடும்ப அரசியலுக்குப் பெயர் போனவராக முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களே நன்கு அறியப்பட்ட ஒருவராக அனைவராலும் அடையாளம் காட்டப்படுகிறார். தமிழ் மக்களது உரிமைப்போராட்டத்தை சர்வதேச நாடுகளுடன் இணைந்து மழுங்கடிக்கச் செய்த பிதாமகராக தென்னிலங்கை மக்களால் தலையில் வைத்துக்கொண்டாடப்பட்ட இவர், அதே தென்னிலங்கை மக்களால் கடும் விமர்சனத்திற்குள்ளாகி வரும் நபராகவும் மாறியிருக்கிறார். அவர் 2005இல் பெரும்பான்மை மக்களின் அதிக ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவரால் தான் ஈழப்போரின் இறுதிக்கட்டம் முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்றது. அவரது இவ் ஜனாதிபதிப் பதவிக் காலக்கட்டத்தில் தான் அமெரிக்காவில் வசித்து வந்த அவரது சகோதரர்களான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ இருவரையும் அழைத்து வந்து இலங்கை அரசியலுக்குள் புகுத்தினார். கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை நாட்டின் பாதுகாப்புச் செயலாளராகவும் பசில் அவர்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிகளை வழங்கி அழகு பார்த்தார். பின்னர் அவரது மகனான நாமல் ராஜபக்ஷ அவர்களையும் பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்தி பாராளுமன்ற உறுப்பினராகவும் அரசியலுக்குள் இழுத்துவந்தார். நாட்டினது எதிர்காலத் தலைவர் என்கிற கனவுடன் நாமல் ராஜபக்ஷ அவர்களின் அரசியல் ரீதியானப் பயணம் தொடர்வதைக் காண்கிறோம். தனக்கென மாபெரும் இளைஞர் படையணியைத் திரட்டிவைத்திருக்கும அவர், எதிர்கால இலங்கை அரசியலில் மிக முக்கியமானவராக அடையாளங் காணப்படுவதற்கான அத்தனை வாய்ப்புக்களும் அவருக்கு இருக்கிறது என்று கூறலாம். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அவரது பல உறவினர்களுக்கும் அரசில் முக்கிய பதவிகளை வழங்கினார். தன்னைச்சுற்றி மிக முக்கியமான அரச உயர் பதவிகளில் தனது குடும்ப உறுப்பினர்களை வைத்துக்கொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அரசுத் தலைவராகத் தனது முதலாவது ஆறாண்டு காலப் பதவியை 2005 நவம்பர் 19 இல் தொடங்கினார். 2010 அரசுத்தலைவர் தேர்தலில் இரண்டாம் தடவையாக 2010 ஜனவரி 27 இல் தெரிவானார். மூன்றாவது தடவையாக 2015 தேர்தலில் போட்டியிட்டு மைத்திரிபால சிறிசேனவிடம் தோற்று 2015 ஜனவரி 9 இல் பதவியில் இருந்து விலகியமை அனைவரும் அறிந்த விடயம். ஜனநாயகத்திற்கு முரணாக மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியலமைப்பில் பெரும்பான்மையைக் கொண்டு செய்த திருத்தங்களும், குடும்ப அரசியலும் அவர் மீது சிங்கள மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை அவநம்பிக்கையாக மாற்றியது. ஒரு பக்கம் தென்னிலங்கை மக்கள் மத்தியில் கொண்டாடப்பட்டு வரும் ஒரு நபராக இருந்தாலும் மறுபக்கத்தில் குடும்ப அரசியலின் பிடிக்குள் இலங்கையின் அரசியல் சிக்கிக்கொண்டு தவித்தது. தனது



சகோதரர்களை நாட்டின் உயர் பதவிகளில் நியமித்ததை பலரும் கண்டிக்க ஆரம்பித்தனர். இதனால் அப்போதைய தென்னிலங்கையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இவர்களின் செயற்பாடு குறித்து கடும் விமர்சனத்தை முன்வைத்து பிரச்சாரங்களை மேற்கொள்ள ஆரம்பித்தது. திடீரென அரசியலில் செல்வாக்கு மிகுந்தவராக உயர்ந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பின்னாளில் தனது செல்வாக்கினை நாட்டு மக்கள் மத்தியில் இருந்து இழக்கவும் ஆரம்பித்தார். இதற்கு அடிப்படைக் காரணமே குடும்ப அரசியல் தான் எனக் கூறப்பட்டது.

அவரை தேர்தலில் தோற்கடிக்கும் நோக்கில் நாட்டின் அரசியற் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும், சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும், சமயத் தலைவர்களும் களமிறங்கினர். இதன் பின்னணியில் தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மக்கள் ஒருபோதும் குடும்ப ஆட்சியினையும் சர்வாதிகாரத்தினையும் விரும்பியதில்லை என்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல்தோல்வி சிறந்த உதாரணமாக இன்றுவரை அரசியலில் பேசப்படுகிறது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, 2018 இல், 2019 அரசுத்தலைவர் தேர்தலுக்கு ஒரு முக்கிய வேட்பாளராக வெளிக் கொணரப்பட்டார் கோட்டாபய. இத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வின் தலைமையிலான இலங்கை பொதுஜன முன்னணியின் சார்பில் இவரது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள தேசியவாத, பொருளாதார மேம்பாடு, தேசிய பாதுகாப்பு ஆகிய கொள்கைகளை முன்னெடுத்து, சிங்கள வாக்காளர்களின் பெரும் ஆதரவோடு 52.25% வாக்குகள் பெற்று 7வது நிறைவேற்றதிகாரம் கொண்ட அரசுத் தலைவராக 2019 நவம்பர் 17 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நாட்டின் பிரதமராக பதவியில் அமர்த்தப்பட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான புதிய அரசாங்கம், 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், அரசியலமைப்பில் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது. அதன் மூலம், வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், இலங்கையில் தேர்தல்களில் போட்டியிடும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அமெரிக்கப் பிரஜையான பசில் ராஜபக்ஷவுக்காகவே, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்குள் அந்தச் சட்டப் பிரமாணம் புகுத்தப்பட்டது என்பது சகலரும் அறிந்திருந்தனர். இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கு ஏற்றவராகக் கூறப்பட்டு தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு பொதுஜன பெரமுனவினால் உள்வாங்கப்பட்டு பின்னர் நாட்டின் நிதியமைச்சராக தற்போது பதவியில் அமர்ந்திருக்கிறார் பசில் ராஜபக்ஷ அவர்கள். ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டிருந்த நாமல் ராஜபக்ஷ அவர்கள், தொடர்ந்தும் மக்களின் ஆணையைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியதுடன், தற்போதைய அரசில் இளைஞர், மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகவும் எண்ணிமத் தொழிநுட்பம், தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் பதவியில் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் இவர்களது ஆட்சியில் சபாநாயகராக பதவியில் இருந்த ராஜபக்ஷக்களுள் ஒருவரான சமல் அவர்கள் தற்போதைய அரசில் கௌரவமான பதவியொன்றைப் பெற்றிருக்கின்றார். பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவின் கடைசி புதல்வாரன யோசித ராஜபக்ஷ அவர்களும் பிரதமர் செயலகத்தில் பதவியொன்றைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையினது அரசியலில் மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதிப் பதவிக்குப் பின்னரான குடும்ப அரசியல் புதிய வடிவம் எடுத்து இன்று இலங்கையில் அவரின் சகோதரர்களும் புதல்வர்களும் நாட்டின் உயர் பதவிகளை வகித்து வருகின்றனர். செல்வாக்கு மிக்க ஒரு தலைவராக தென்னிலங்கை மக்கள் மத்தியில் வலம்வரும் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் இந்தப் போக்கு அன்றும் இன்றும் மக்கள் மத்தியில் சினத்தை ஏற்படுத்தியுள்ளது. நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னை இலங்கை அரசியலில் நிலையாக நிறுத்தியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள், கொவிட் வைரஸ் பரவலின் பின்னரான இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு பதில் கூறவேண்டியவராக மாறியிருக்கிறார். அத்துடன் தனது ஆட்சியினைத் தக்கவைக்க போராடவேண்டிய சூழலும் இன்று ஏற்பட்டுள்ளது. பிரதமராக இருக்கின்ற மஹிந்த ராஜபக்ஷவும் உயர் பதவிகளில் இருக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்களும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக பார்க்கப்படுகின்றார்கள். வெறுமனே பொதுஜன பெரமுனவால் கட்டமைக்கப்படாத இவ்வரசாங்கத்தில் பங்காளிக் கட்சிகள் உள்ளனர். இன்று இக்கட்சிகளுக்குள் பிரச்சினைகள், குழப்பங்கள் எழுந்துள்ளது.

சுசில் பிரேமஜயந்த அவர்களை பதவி நீக்கிய ஜனாதிபதி, இதன் தொடர்ச்சியாக விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை பதவி நீக்கினார். அத்துடன் வாசுதேவ நாணயக்கார அமைச்சர் பதவியில் இருந்து விலகியுள்ளார். இதற்கிடையில் இராஜாங்க அமைச்சர்கள் ஒவ்வொருவராக பதவியை இராஜினாமா செய்து வருகின்றனர். இன்றைய இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு இந்த அரசின் கொள்கைகளும் குடும்ப அரசியலும் தான் காரணம் என்கின்றனர். நிதியமைச்சராகவுள்ள பசில் ராஜபக்ஷ மீது நேரடியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது. அமெரிக்கப் பிரஜை மற்றும் இலங்கையின் பிரஜையான அவர் மீதான விமர்சனங்கள் உட்கட்சிக்குள்ளேயே பூதாகரமாக வெடிக்க ஆரம்பித்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் உடனடியாக நாட்டைவிட்டு அமெரிக்கா சென்ற பசில் மீது கடும் விமர்சனங்கள் இன்றும் முன்வைக்கப்படுகின்றது. இவரால் தான் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தார் என்கின்றனர் நோக்கர்கள். இக் குடும்பத்தினர் அண்ணன், தம்பி, மகன் என ஆட்சிசெய்து வருவதாக தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். குடும்ப அரசியலின் காரணமாக மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாக்கள் விலகி நிற்பதையும், அவ்வாறு விலகி நிற்பவர்களால் தனித்து எதனையும் செய்ய முடியாத சூழல் இருப்பதையும் காண முடிகின்றது. விமல் மற்றும் உதய கம்மன்பிலவுக்கு எதிர்க்கட்சிக்குள், சுதந்திரக் கட்சிக்குள் இடம் கிடைக்குமா என்றால் அதுவும் கேள்விக்குறிதான்.

ஏற்கனவே குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட நாட்டின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்த சம்பவத்தை மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் நன்கு அறிந்திருந்த போதிலும் மீண்டும் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுடன் இலங்கையின் இன்றைய நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் பொருளாதார மற்றும் அரசியலைக் கையாள முற்பட்ட விதம் இன்று அரசியலில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. அத்துடன் இராணுவப் பின்னணியிலான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனநாயகத்தை கைவிட்ட இராணுவப் போக்கான ஆட்சியும் நாட்டில் கடும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. நேரடியாக ஆளுங்கட்சியை எதிர்க்கும் செயற்பாட்டில் மக்கள் இன்று வீதிகளில் இறங்கியுள்ளனர்.

இந்த ஆட்சியின் செயற்பாடுகளால் தான் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றம் தொடங்கி அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளதைக் கண்டித்து உடனடியாக பதவியில் இருந்து ஜனாதிபதி மற்றும் பிரதமரை விலகுமாறு அரசியற் கட்சிகளின் ஆதரவுடன் ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. தென்னிலங்கை சிங்கள மக்களால் பதவியில் அமர்த்தப்பட்ட ஜனாதிபதி இன்று அவர்களால் வெறுக்கப்படும் அளவிற்குச் சென்றுள்ளார். இவர்களின் குடும்ப இழுபறி அரசியலால் இலங்கை வாழ் மூவின மக்களும் குழப்பமடையும் நிலையும் உருவாகியுள்ளது. இன்று மக்கள் எதிர்பார்த்த நலனைப் பெற முடியாத சூழ்நிலையில், மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக கொதித்தெழுந்துள்ளனர்.

ஜனாதிபதியின் செயற்பாடுகளில் குடும்ப உறுப்பினர்களின் பங்கும் உள்ளதால், ஒரு நாட்டை ஒரு குடும்பமே ஆள்வது கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்திற்கு முரணானது என்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. பொறுப்புவாய்ந்த பதவிகளில் இவ் குடும்ப உறுப்பினர்கள் பதவி வகிப்பதால் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் எதனையும் செய்ய முடியாமல் இருப்பதாகவும் குடும்ப ஆதிக்கம் அதிகரித்த ஆட்சியாக இவ்வாட்சி வர்ணிக்கப்படுகின்றது. நாடு எதிர்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி என்பது பாரதூரமானது. கடந்த தேர்தலில் ராஜபக்ஷர்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த வெற்றியை பரிசளித்த மக்கள், இன்றைக்கு தேர்தலொன்று நடைபெறுமாக இருந்தால், மாற்றி வாக்களிக்கக்கூடிய நிலையே காணப்படுகின்றது என்பதுவே இன்றைய அரசியலின் யதார்த்தம்.

**சசிகரன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## மக்களது போராட்டங்களால் நாடு முடக்கப்படும் அபாயம்

சிறுபான்மைச் சமூகங்கள் இந்நாட்டில் உரிமைகளுக்காகவும் இந்நாட்டில் தாம் சந்தித்த அநீதிகளுக்கு தீர்வு வேண்டும். அதிகாரப்பகிர்வு போன்ற விடயங்களுக்காக இதுவரை காலமும் பாரிய போராட்டங்களை செய்து வந்தனர். இப்போராட்டங்கள் இன்றும் தொடர்கின்றது. இன்று ஒட்டுமொத்த நாட்டு மக்களும் உணவுத்தட்டுப்பாடு. விலை உயர்வு என்பவற்றைக் கண்டித்தும். இவ்வரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பவற்றை வலியுறுத்தியும் இலங்கையின் தலைநகரான கொழும்பில் பாரிய போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். இதற்கு நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அவர்களுடன் இணைந்த கட்சிகள் ஆதரவுடன் ஒரு பகுதியில் போராட்டங்கள் நடைபெற்றாலும். மறுபக்கத்தில் தேசிய மக்கள் சக்தி தரப்பினர் தங்களது இளைஞர் படையணி உட்பட்ட தமது ஆதரவாளர்களை ஒன்றுதிரட்டி பாரியளவிலான போராட்டங்களை அரசிற்கே சாவால் விடும் அளவிற்கு நடத்தி வருகின்றனர். போராட்டங்களுக்காக திரண்டிருக்கும் மக்களைப் பார்க்கின்ற போது அரசிற்கு கடும் சவாலான சூழல் நிலவுவதை அறிந்துகொள்ள முடிகின்றது.

ஒரு ஜனநாயக நாட்டிற்குள் அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து வாக்களித்த மக்கள் அதிலும் குறிப்பாக தென்னிலங்கை சிங்கள மக்களே இவ்வளவு பெரிய போராட்டமொன்றை இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் மேற்கொண்டிருப்பது சாதாரணமான விடயமல்ல. கொழும்பு என்பது மிகப்பெரிய நகரம். சமையல் எரிவாயு என்பது நகரப் பகுதிகளில் மிக மிக அத்தியாவசியமானதாக மாறியிருக்கும் நிலையில். மின்வெட்டு அமுல்ப்படுத்தலும் தொடர்கின்றது.

மக்களது போராட்டங்கள் வலுப்பெறும் பட்சத்தில். அரசாங்கம் தற்போது இருக்கும் நெருக்கடியான சூழலில் தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் இழுபறியில் இருக்கின்ற நிலையில். ஒட்டுமொத்த நாட்டு மக்களின் இவ்வாறான போராட்டங்களை எதிர்கொள்வது கடினம். மக்களைக் கட்டுப்படுத்துவது கடினம். உள்நாட்டிலும் சரி சர்வதேச ரீதியாகவும் சரி அரசு நெருக்கடிகளைச் சந்திக்கின்றபோது ஆட்சியைக் கொண்டு நடத்துவதிலும் பிரச்சினைகள் எழும்.

உலகில் பல நாடுகளில் மக்கள் புரட்சியின் மூலமாக ஆட்சிக்கவிழ்ப்புக்கள் நடந்திருக்கிறது. இந்தப் போராட்டங்களால் மனித உரிமையை மீறுகின்ற பல சம்பவங்கள் கூடப் பதிவாக வாய்ப்பும் இருக்கிறது. தொடர்ச்சியான இப்போராட்டங்களால் நாட்டின் செயற்பாடுகளை முடக்கவேண்டியும் ஏற்படலாம். எதிர்காலத்தில் இவ்வாறான போராட்டங்கள் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படும் நிலை உருவாகலாம்.

எனவே இந்த நெருக்கடியான சூழலில் மக்களின் நலன் குறித்து. பிரச்சினைகள் குறித்து உடனடியான தீர்வுகளைக் காண இவ்வரசு தயாராகவேண்டும். சர்வதேச உள்நாட்டிலுள்ள பொருளாதார வல்லுநர்கள். துறைசார்ந்த மூவின சமூகத்தினரையும் இணைத்து நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள், திட்டமிடல்கள் என அனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு கட்டுக்கோப்பானதாக ஒரே கொள்கையுடன் மூவின மக்களையும் இணைத்துக்கொண்டு பயணித்தால் மாத்திரமே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி என்பது சாத்தியமாகும். மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக போலியான செயற்பாடுகளைச் செய்யாது நீதியாகச் செயற்படவேண்டும். சர்வதேச கடன்களால் மாத்திரம் ஒரு நாடு முன்னேற்றமடையாது. ஒப்பந்தங்களின் மூலமாக இலங்கையின் சொத்துக்கள், வளங்கள் தாரைவார்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மக்கள் தான் அரசாங்கத்தை உருவாக்குகிறார்கள் என்பதை நினைவிற்கொண்டு, ஆட்சியாளர்கள் செயற்படுவது அவசியம்.

# 183 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



இயற்கையில் எங்கும் நுழையக்கூடிய ஈரலிப்பிலிருந்து நன்றாகக் காப்பிடப்பட்ட, பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான இரகசியக் களஞ்சியங்களை உருவாக்கினார்கள் (மேற்கு உக்ரேனில் இன்றும் பென்ஜெரொவ்வின் ஆட்களாலும் ஜேர்மனிய எகேர்களாலும் அரச பாதுகாப்பு அமைச்சின் சிறப்புக் குழுக்களாலும் பயன்படுத்தப்பட்ட இரகசியக் களஞ்சியங்கள் இருக்கின்றன. இன்றைய காலத்தில் அவை நம்மவர்கள் எவருக்கும் தெரியாமலும் உள்ளது). கொண்டுசெல்கின்ற பொருட்களைக் களஞ்சிய ப்படுத்துவதற்காகவே இரகசியக் களஞ்சியங்களுக்குச் சென்றார்கள். ஏனைய நேரத்தில் பதுங்கித் தாக்குதல்களிலும் தேடுதல் நடவடிக்கைகளிலும் சிறப்பணிகள் ஈடுபட்டன. சூழ்நிலையைப் பொறுத்து சிறப்பணிகளுக்குப் பொறுப்பான பிரதேசங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதிக சமயங்களில் பிரதேசம் 15* 15 கி.மீ பரப்பாகவே இருந்தது. வழக்கமாகக் குழுவின் கட்டளையாளனாக இராணுவ வேவுக்காரனே இருந்தான். ஆனால் அவனது உதவியாளனாக அப் பிரதேசத்தில் சூழ்நிலையையும் மக்களையும் அறிந்த நடவடிக்கையாளனே இருந்தான். அவர்களுக்குப் பணி வழங்கப்படும். அதன் வரையறைக்குட்பட்டு நிலைமைகளுக்கேற்ப சுயமாக முடிவுகளை எடுப்பார்கள்.

தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை தடை செய்யப்பட்டிருந்தது. குறிக்கப்பட்ட நேரத்தில் அலைவாங்கலுக்கு மட்டுமே தொலைத் தொடர்பு சாதனம் இயக்கப்பட்டது. ஏனெனில் அருகில் எங்கோ தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நடைபெறுகின்ற தென்பதைக் கெரில்லா முகாமில் உடனேயே கண்டுகொண்டனர் (இன்றைய காலத்தில் தொழினுட்ப சாதனங்களின் உதவியுடன் இயங்குகின்ற தொலைத்தொடர்புக் கருவியின் அமைவிடத்தைக் கண்டுகொள்ளல்), காயமடைந்தவனையும் கைதியையும் பின்னுக்கு அனுப்புதல், ஆட்டிலறிச் சூடுகளுக்கான திருத்தத்தை வழங்குதல், கெரில்லா முகாம்கள் மீது விமானப்படைத் தாக்குதலுக்குக் குறிப்பு வழங்குதல் ஆகிய சூழ்நிலைகளில் மாத்திரமே தொடர்புகொள்ள அனுமதிக்கப்பட்டது.

எந்தவிதத் தடயங்களையும் விடாமல் குழு சந்தடியின்றியும் மறைவாகவும் செயற்பட்டது. உண்மையில் இக்குழு இயற்கையில் சீவிப்பதைப்போலத் தெரியவில்லை. எந்தவிதக் கணப்பு நெருப்போ வெற்றுத் தகர டக்பாக்களோ உடைந்த மரக்கொப்புக்களோ அறுந்த சிலந்தி வலைகளோ இதுபோன்ற பிற தடயங்களோ இருக்கவில்லை. புகைபிடிப்பதைப் பற்றிய பேச்சுக்கு அங்கே இடமில்லை. தங்களது பொறுப்புக்குள்ளிருக்கின்ற பிரதேசம் அங்கம் அங்கமாக ஆராயப்பட்டது. குழு சமர் நடவடிக்கைக்காகப் பாதைகளுக்கு இறங்கியது. கெரில்லாக்களின் பாதைகளில் பதுங்கித் தாக்குதலுக்காக உருமறைப்பு வலைகளுடன் நீண்ட நேரம் (சில வேளைகளில் 2 – 3 நாட்கள்) காத்துக்கிடக்க வேண்டியிருந்தது. உருமறைப்பு இயற்கையையொத்ததாக அவசியம் இருக்கவேண்டும்.

ஏனெனில் கெரில்லாக்களின் வேவுக்காரர்களும் இதனையொத்த நிபுணர்களே. அத்துடன் அவர்கள் காட்டின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் தெரிந்தவர்களாக இருந்தனர்.

கெரில்லாக்களின் பாதைகளில் பிரதான நகர்வுகள் யாவும் இரவில் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே தான் பிரதான முதல் எதிரி களைப்போ பசியோ அல்லாமல் நுளம்புகளேயாகும். ஜேர்மனியர்களுக்கு நுளம்புக்கெதிரான எண்ணெய் வழங்கப்பட்டது. இதனைவிடத் தரமான நுளம்புக்கெதிரான மருந்துகள் இல்லை. வியட்நாமில் அமெரிக்கர்களுக்கும் ஏதோ ஒன்று வழங்கப்பட்டது. ரசிய சிறப்புக் குழுவினருக்கு ஒருபோதும் எந்தவிதமான மருந்துகளும் வழங்கப்படவில்லை.

எகேர் சிறப்புக் குழுக்கள் எதிர்ப்பியக்கத்தினருடன் .றப்பர்த் தொடுகை நிலையில் செயற்பட்டார்கள். காட்டுச் சூழல் இதற்கு இடந்தருவதாக இருந்தது. கெரில்லாக்களின் முகாம்களிலிருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவிலிருந்த எகேர்கள் கிட்டத்தட்ட தாக்கப்பட முடியாதவர்களாக இருந்தனர். கெரில்லாக்களிடமுள்ள படை களால் காட்டில் தேடுதல் மேற்கொள்வது அர்த்தமற்ற செயலாகும். எகேர்களைத் தேடி கெரில்லாக்களின் தேடுதல் வேவுக்குழு அண்ணளவாக அவர்களையொத்த ஆளணிகளுடன் மாத்திரமே செல்லலாம். இருந்தபோதும் வழக்கமாக அவர்கள் எகேர்களின் பதுங்கித் தாக்குதலுக்குள் அகப்பட்டார்கள். அல்லது கண்ணிவெடியில் சிக்கினார்கள். இச் சம்பவம் யாருக்குக் கூடுதல் தேவையுள்ளதோ அவரே எப்பொழுதும் தோல்வியடைவார் என்ற தொடரிலிருந்து வரும் நிகழ்வாகும்.


உளறுவாயன்களைக் கைப்பற்றுதல், கெரில்லாத் தொடரணி மீது தாக்குதல் தொடுத்தல், கெரில்லாக்களின் தொடர்புகாரர்களைக் கண்காணித்தல் ஆகியவற்றுடன் சிறப்புக் குழுக்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படவில்லை. தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் தகவல்கள் துல்லிய நோக்கம் கொண்ட நடவடிக்கைக்குச் சிறப்பணியை ஒழுங்குபடுத்துகின்றது. சூழ்நிலையைப் பொறுத்து, சிறியளவிலான கெரில்லாப் படைப்பிரிவின் மீது தாக்குதல் தொடுத்தல், கெரில்லாக் கட்டளையகங்களை அழித்தல், ஆவணங்களைக் கைப்பற்றல் போன்ற செயற்பாடுகளுக்காகச் சில சிறப்பணிகளை ஒன்று சேர்ப்பதற்கான கட்டளைகளும் வழங்கப்படலாம்.

1946 ஆம் ஆண்டு பென்ஜெரொவ் தலைவனின் கட்டளையகத்தின் மீது பயங்கரமான வெற்றிகரத் திடீர்த்தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத் தலைமையகம் காட்டுக்குள் ஆழமாக அமைந்திருந்த கிராமத்தில் இருந்தது. அங்கு பெரியளவில் படைகள் சென்றால், நிச்சயமாகத் தெரிந்துவிடும். சில பாதுகாப்பு அமைச்சின் சிறப்புக் குழுக்கள் ஒன்றுசேர்ந்து, கிராமத்தின் பக்கவாட்டாகத் திசைதிருப்பல் தாக்குதலைத் தொடுத்தனர். இவர்களின் வரவை எவருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால், எதிர்ப்புப் பலமானதாக இருந்தது. எதிரியின் கவனம் திசைதிருப்பப்பட்டதைப் பயன்படுத்தி, சிறப்புக் குழுக்களில் ஒன்று கிராமத்தின் மறுபக்கமாக உள்நுழைந்து, தெருச்சண்டைத் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி வீதி வழியாக நகர்ந்தது. அதாவது இ.யந்திரச் சுடுகலன்களின் சூட்டுக் காப்பில் சுடுகலனாளர்கள் நகர்ந்து நிலையெடுத்துச் சுடத்தொடங்க, அவர்களின் காப்புச் சூட்டில் இயந்திரச் சுடுகலனாளர்கள் நகர்ந்தனர். வேகமாக எதுவித இழப்புமின்றிக் கட்டளையகத்தைச் சென்றடைந்தனர். கையெறிகுண்டுகளால் அதனைத்தாக்கி ஆவண மற்றும் முகவர்களுக்கான கோப்புக்களைக் கைப்பற்றினர். அரைவாசி ஸ்பெற்னாஸ்காரர்கள் பென்ஜெரொவ்களின் சீருடையில் இருந்தனர்.

ஏற்கனவே நாங்கள் கூறியதைப்போல, கெரில்லா மற்றும் கெரில்லா எதிர்ப்புப் போரில் தடைசெய்யப்பட்ட உத்திகள் என எதுவும் இல்லை. வழக்கமான முறை யாதெனில், பொய்யான கெரில்லாப் படைப்பிரிவொன்றை உருவாக்குதலாகும். மேலே குறிப்பிட்ட எகேர்களின் சிறப்புக் குழுக்களை அடிப்படையாகக்கொண்டு இந்தப் படைப்பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன. நட வடிக்கைக்காரர்களின் மூலமும் முகவர்களின் ஊடாகவும் கெரில்லாக்களின் தொடர்பாளர்களுக் கூடாகவும் பெரியளவிலான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதெனப் பொய்யான தகவல்களை எதிர்ப்பியக்கத்திற்கு அனுப்புகின்றனர். இந் நடவடிக்கைக்கு வருகின்ற பாதையில் கெரில்லாக்கள் திட்டமிட்ட பதுங்கித் தாக்குதலைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆரம்பத்திலோ பின்னரோ கெரில்லா முகாமைச் சுற்றியுள்ள பதுங்கித் தாக்குதல் வட்டம் நெருக்கப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் திறந்த சமரைத் தொடுக்க உதவுகின்றன. மோட்டார்த் தாக்குதல்கள், ஆகாயத்திலிருந்து தாக்குதல்கள், தரைப்படையின் தாக்குதல்கள் ஆகியன தொடங்கப்படுகின்றன. காட்டில் தேடுதல் மேற்கொள்வதிலும் இறங்கலாம். இது பிரதேசத்தை அடிப்படையாகக்கொண்டு திட்டமிட்டு, மேற்கொள்ளப்படுகின்றது. அவசியமாக காட்டிடைவெளிகள், அகன்றபாதைகள், காட்டிடையிலுள்ள பற்றைகள் (புல்வெளிகள்), பள்ளத்தாக்குகள், சுருக்கமாகச் சொல்வதானால் அங்குள்ள வெட்டையான பிரதேசங்கள் யாவிலும் தேடுதல் நடத்தப்படுகின்றது.

**தொடர்வான்....**

# ஜனாஸாக்களை கதறக்கதற எரித்த சாபத்தையே இந்த ஆட்சியாளர்கள் அனுபவித்து வருகின்றனர் – ரவூப் ஹக்கீம்



பதைக்க பதைக்க முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்த சாபம் இந்த ஆட்சியை ஒரு நாளும் விட்டு வைக்காது. இந்த நாட்டினுடைய பொருளாதார முகாமைத்துவம் இன்று படுமோசமாக எங்களை படு பாதாளத்திற்குள் தள்ளியிருக்கின்றது. எந்த அரசாங்கமும் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடத்தில் இவ்வளவு மக்களின் சாபத்தை பெற்ற அரசாங்கம் ஒன்றை நாங்கள் இதுவரை கண்டதே கிடையாது. எல்லாரும் வீட்டுக்குப்போ என்று சொல்லுமளவிற்கு இந்த ஆட்சியாளர்கள் மாறிவிட்டார்கள். முஸ்லிம்களின் கஷ்டத்திலும் நஷ்டத்திலும் தான் இவர்களின் பிளைப்புவாத அரசியலே நடந்தது. சம்மாந்துறை எஸ்.டி.ஆர் இந்த அமைப்பு வளர்ந்த 5 வருடத்திற்குள்ளேயும் தான் இந்த சம்மாந்துறைக்குள்ளேயும் எங்களுக்கு தெரியாமல் சில விடயங்கள் நடந்தது.

இங்கு ஒரு வீட்டில் மிகப்பெரிய குண்டு வெடிப்பிற்கான மருந்துப் பொருட்கள் ஒரு பெரிய கபடா கண்டுபிடிக்கப்பட்டது ஒருத்தருக்கும் தெரியாது நிந்தவூரில் அப்படி, சாய்ந்தமருதுவில் தற்கொலை குண்டுத்தாரிகளாக தங்களை மாய்த்துக்கொண்டார்கள். ஆனால் இப்படியான ஒரு தீவிரவாதம் இந்த சமூகத்தில் இருந்ததை நாங்கள் யாரும் காணவில்லை. எங்களுக்கு அப்படியானதொரு உணர்வு ஒன்றும் ஏற்படவுமில்லை. எனவே இந்த சந்தர்ப்பத்தில் தான் எஸ்.எல்.என் எஸ்.டி.ஆர் என்ற அமைப்பு உருகாக்கப்பட்டது. இது எந்த காலகட்டத்திலே வந்தது அந்த காலகட்டத்தில் இப்படியானதொரு தீவிரவாதம் எங்களுக்குள் இருந்தது யாருக்கும் தெரியவில்லை. ஆனால் இது எல்லாம் அம்பாறையில் ஒரு கொத்துரொட்டி கடையில் தான் இந்த பிரச்சனைக்கான ஆரம்ப வித்து இடப்பட்டது. அதைத்தான் இங்கு அடிப்படி நடக்கின்ற விடயங்களிலும் இந்த விடயம் சொல்லப்படுகின்றது. அதற்கு பொறுப்பாக இருந்தவர்கள் தற்பொழுது சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பொறுப்பாக இருக்கின்றார்கள் நாட்டில். அது சூத்திரதாரிகள் நான் இங்கு பெயர் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. இன்று நாட்டினுடைய கத்தோலிக்க மக்களின் பேராயர் காடினல் ஜெனீவாவிற்கு போறார் போப்பாண்டவரை சந்திக்கின்றார் இந்த நாட்டிற்கு எதிராக முறையீடு செய்கின்றார் காடினல் ஆட்டகை போய் முறையீடு செய்திருந்தால் பிரச்சனையில்லை தப்பித்தவறி ஒரு முஸ்லிம் போய் முறையீடு செய்தீருந்தால் தொலைந்து போனோம் அப்படித்தான் இன்று எல்லாருக்கும் பீதி வந்திருக்கின்றது. இந்த சமூகத்தை பீதிக்குள் வைத்துக் கொண்டிருப்பதற்காக அப்படியானதொரு விடயத்திலே இவர்கள் வெற்றி கண்டிருக்கின்றார்கள்.

எல்லோரும் அடங்கிப்போய்விட்டார்கள். இனி அடங்கியிருக்க முடியாது அநியாயத்தை தட்டி கேட்க வேண்டும் அவர்களுக்குள்ளே இருந்து நடந்த இரகசிய திட்டமிடல்கள் என்ன என்பதை புலனாய்வாளர்கள் இன்று தங்களுடைய உச்ச நீதிமன்றத்திலே போய் மனித உரிமை வழக்கிலே சொல்லுகின்றார்கள். நலினின் வீட்டு ஊருக்கு பக்கத்தில் ஒரு வெடிகுண்டு கவசம் திடீரென ஒரு போக்குக்கு கீழே கண்டுபிடிக்கப்படுகின்றது. எப்ப அந்த பொலிஸ்காரனின் கழுத்தை அறுத்துவிட்டு துப்பாக்கியை சஹரானினுடைய கும்பல் கொண்டுபோன நேரம். அதை கொண்டுபோய் வைத்ததை யார் என்பதை இந்த நாட்டினுடைய புலனாய்வு செய்த அதிகாரி ஒருவரே இன்று உச்ச நீதிமன்றிலே சொல்லுகின்றார். இப்படி எங்களுடைய விசாரணையை திசை திருப்புவதற்கு இதை கொண்டுபோய் அந்த போக்குக்குள்ளே போட்டார்கள். இதுக்கு பின்னால் மனித உரிமை ஆணையாளர் ஜெனீவாவில் சொல்லுகின்றார் புதிய அறிக்கை இந்த குண்டுவெடிப்பிற்கு பின்னால் இலங்கையின் பாதுகாப்புத்துறை இருந்ததா என்பதை விசாரிக்க வேண்டும் நேரடியாக அப்படியானதொரு கேள்வியை மனித உரிமை ஆணையாளரே வைக்கின்ற அளவிற்கு விடயம் பெரித்துவிட்டது. இந்த விடயம் இப்பொழுது அம்பளத்திற்கு வருகின்றது.

அப்பாவி இளைஞர்கள் ஆயிரக்கணக்கிலே பிடிபட்டார்கள். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையும் அதிலே முடிச்சுப் போடலாம் என பார்த்தார்கள். எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முன்னாலே நான் மிகத் தீவிரமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டேன் அதுவும் எனக்கு தெரிந்த சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளினால். தீவிரமாக என்னை குறுக்கி மறுக்கி என்னிடம் கேள்விகள் கேட்டார்கள். ஆனால் நான் அப்படி லேசில் அம்பிடுகின்ற ஆள் இல்லை. எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால் இதற்கு பின்னால் இன்று இருக்கின்ற இரகசியங்கள் அம்பளத்திற்கு வந்து கொண்டிருக்கின்றது. எப்படியாவது முஸ்லிம் தலைமைகளின் தலையிலே இதைப்போட்டு இந்த தேங்காயை உடைக்கலாம் என்று பார்த்தார்கள். இன்று இதற்கு பின்னாலே பெரும் சதி இருக்கின்றது என்பது சம்பந்தமான சந்தேகம் பலமாக வலுத்து விட்டது. என்னுடைய இந்த பேச்சையும் எவ்வளவோ துறையிலே கேட்டுக்கொண்டிருப்பார்கள். இதன் பதிவும் போகும். அதனால் நான் கொஞ்சம் கவனமாகத் தான் பேச வேண்டும். ஆனால் நான் சொல்வதெல்லாம் இப்ப பகீரங்க வெளியிலே சொல்லப்படுகின்ற விடயங்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அறிக்கையில் சொல்லியிருக்கின்ற விடயம். உயர் நீதிமன்றிலே இருக்கின்ற மனுக்களிலே சத்தியகடசாயிகளினால் கொடுக்கப் பட்டிருக்கின்ற விடயம்.

எனவே இவற்றையெல்லாம் இனி நாங்கள் ஒழித்து மறைத்து பேச வேண்டிய விடயங்கள் இல்லை இருந்தாலும் இந்த சமூகத்திற்கு எதிரான இந்த பாய்ச்சல் இனியாவது முடிவுக்கு வருமா என்றால் அது லேசில் முடிவுக்கு வரும் விடயமல்ல. எப்ப என்றாலும் நாங்கள் சீண்டிவிட்டு குழப்பத்தை எடுத்து அதில் குளிர்காயலாம் என்பதற்கு இந்த பாலமுனையிலும் அங்கு ஒரு சிலை வைப்பதற்கான முயற்சி இப்படி ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒன்றில் சீண்டிப்பார்ப்பது. குழப்பி வைப்பது அதோடு பெரும்பான்மை சிங்கள மக்களை கொஞ்சம் உசுப்பி வைப்பது. தங்களுடைய ஆட்சி ஆட்டம் காணுகின்றது என்றவுடன் இருக்கின்ற ஒரேயொரு ஆயுதம் இடி இடிக்கும் பொழுது எறும்பை தூக்கிப் போடுவதுபோல் இந்த வேலையைத் தான் இவர்கள் பார்ப்பார்கள். எனவே அதற்கு அஞ்சி ஒடுங்கி இனியும் பயந்து மூளையிலே முடங்கி போய் இருக்கின்ற ஒரு சமூகமாக நாங்கள் இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. முஸ்லிம் காங்கிரஸின் இயக்கம் அதனுடைய நீதியம்இன்றுஏதோவிரைத்துப்போய்விட்டதாக சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இனி காலம் கனிந்துவிட்டது. இனி இந்த இயக்கத்தை நம்பியிருக்கின்ற மக்கள் இதில் ஒரு சிலர் இயக்கத்தினுடைய நோக்கத்திற்கு முரணாக நடந்துகொள்கின்றார்கள் என்ற பரவலான விமர்சனம் பேசப்படுகின்றது. அவர்களுக்கும் இதிலே தெளிவுவர வேண்டும் என்பதற்காக பொறுமையோடு தொடர்ந்தும்

ஏன் என்றால் இந்த கட்சியை கூறுபோடுவதற்கு பார்த்துக்கொண்டிருக்கின்ற சக்திகளுக்கு இடம்கொடுத்து விடக்கூடாது என்பதற்காக மிக நிதானமாக அந்த விடயங்களை நான் கையாள்வதை என்னுடைய பலவீனமாக ஒரு சிலர் நினைக்கலாம். ஒவ்வொரு தேர்தல் முடிந்தவுடன் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பலத்தை சீரழிப்பதற்கு அதிகாரங்களை கொடுத்து மக்களை வசப்படுத்துவதற்கு நிறைய எத்தனங்கள் தொடர்ந்தும் என்னுடைய வரலாற்றிலே நடக்கின்றது. மறைந்த தலைவரின் காலத்தில் இருந்து வருகின்றது அது. அவர் சந்திக்காத சவால் இல்லை. நாங்கள் பேசாத வழக்கில்லை. ஆனால் தொடர்ந்தும் இந்த பிரச்சனைகள் எது வந்தாலும் தைரியமாக அதற்கு முகம் கொடுப்பதற்கு பலமான இயக்கமும் போராளிகளும் இருக்கின்றர்கள் என்ற நம்பிக்கையோடு தான் இந்த இயக்கம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் நேற்று முளைத்த காளான் இயக்கங்களுக்கு இது எல்லாம் கிடையாது. அவர்கள் எல்லாம் முஸ்லிம் காங்கிரஸிலே இருந்து அரசியல் அடையாளத்தை பெற்றவர்கள். இப்ப அவர்களுக்கு இருக்கும் பெரிய சான்றிதழ் ஏன் இந்த அரசாங்கம் எங்களை பழிவாங்கப் பார்க்கின்றது என்பதை சொல்லி தான் போகின்றார்கள். உங்களை எல்லாரை விடவும் கூடுதலாக பழிவாங்கப்பட்டவர்கள் இருக்கின்றோம் இந்த முஸ்லிம் காங்கிரஸில். நாங்கள் அதை சொல்லி சொல்லி போவதில்லை அது எங்களுடைய அரசியலிலே இரண்டென கலந்த விடயம் அதைப்பற்றி நாங்கள் அங்கலாயிக்கவில்லை. அங்கலாயிக்க வேண்டிய அவசியமில்லை. திடமாக உறுதியாக இவற்றிற்கு எல்லாம் முகம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நிச்சயமாக இந்த ஆட்சியாளர்கள் மீது நாடு பூராகவும் வந்திருக்கின்ற அதிருப்தி இதிலே முஸ்லிம் காங்கிரஸின் இயக்கத்தின் பங்களிப்பு சகல கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பலமான ஒரு போராட்டத்திற்கு நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இலகுவான விடயம் இல்லை. ஏன் என்றால் நாடு அப்படியானதொரு நிலைமைக்கு வந்து விட்டது. ஒவ்வொரு நாளும் போய் ஒவ்வொரு நாட்டிலும் பிச்சை வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது ஒரு பில்லியன் ரூபாயை இந்தியா திருப்பி கொடுத்திருக்கின்றது. இன்னும் இரண்டரை மாதத்தில் அது முடிந்துவிடும். அதன் பிறகு எங்கு போவது இப்படியே போய்க்கொண்டிருக்கலாம். ஆனால் ஒன்றை ஞாபகம் வைக்க வேண்டும் இதே மாதிரி நிலைமை கிரேக்கத்திற்கு வந்தது லெபனனுக்கு வந்தது ஏன் கன்ரிபிக் வாங் கிளப் நாடு வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்டால் வேறு வழியில்லை. கிரேக்கத்திலே நடந்தது ஒரு வருடத்திற்குள் மூன்று தடவைகள் ஆட்சி அமைத்து அமைத்து புரட்டின. ஒருத்தருக்கும் ஆட்சி அமைக்க ஏலாது ஒருத்தரிலும் மக்களுக்கு திருப்தி இல்லை. ஒவ்வொரு நாளும் விலைவாசி ஏறிக்கொண்டு தான் போகும் கட்டுப்படுத்த ஏலாது அது தான் இப்பொழுது வரப்போகின்றது. ஆட்சியை பிடிப்பதற்கு அவசரப்படுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. நாட்டை அப்படியே நாசமாக்கியாச்சு. எனவே இந்த பிரச்சனையில் இருந்து மீள்வதற்கு இனி இந்த 7 மூளையை நம்பி வேலையில்லை. கொளகத்தானோ அவருக்கு பின்னால் எங்களது ஆட்களும் கொஞ்ச பேர் போய் இப்ப நல்லா மாட்டி நிற்கின்றார்கள். எல்லாம் சாபம் பதைக்க பதைக்க முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்த சாபம் இந்த ஆட்சியை ஒரு நாளும் விட்டுவைக்காது. எத்தனை பேர் அழுது கேட்ட துவா எப்படியெல்லாம் உசாரில பேசினார்கள்.

எங்கெங்கெல்லாம் முஸ்லிம் ஊர் இருக்குதோ அங்கு தான் கொரோனா பரவுது என்று என்ன மாதிரி கூத்து காட்டினார்கள். எப்படியான இந்த உலகம் இல்லை இங்கு ஒரு சில ஊடகங்கள் இருக்கின்றது. அந்த ஊடகங்கள் எல்லாம் இப்ப விழுந்தடித்து எதிர்க்கட்சியின் கூட்டங்களை காட்டுகின்றார்கள். காலையில் பத்திரிகை கண்ணோட்டம் வாசிக்கின்ற அந்த பெயர் பெற்ற ஊடகங்கள் இந்த அரசாங்கத்தின் ஊது குழலாக இருந்த ஊடகங்கள் இன்று இந்த அரசாங்கத்தை தாருமாறாக விமர்சிக்கின்றார்கள் ஏன் என்றால் விமர்சிக்காவிட்டால் ஊடகத்தை ஒருத்தரும் பார்க்க மாட்டார்கள் அதற்காக விமர்சிக்கின்றார்கள். இந்த சூழலில் தான் இன்று நாங்கள் இனிமேலும் அடங்கி போய் ஒடுங்கி போய் இருப்பதை விடவும் மிகத் தெளிவாக இந்த போராட்டத்தில் இறங்க வேண்டும். எத்தனையோ ஆட்சிமாற்றங்களை உருவாக்கி இயக்கி இருக்கின்றது முஸ்லிம் காங்கிரஸ். எங்களால் அதை செய்ய முடியும் என்பதை நாங்கள் கூட்டாக அனைத்து சினேக சக்திகளுடனும் இணைந்து அதை நாங்கள் சாதிக்க வேண்டும். இங்கு சகோதரி இன்ப உதை வந்திருக்கின்றார். ஒரு தமிழ் சகோதரி இன்று சகோதர தமிழ் சமூகத்தோடு எங்களுக்கு முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் சினேகபூர்வமாக அவர்களையும் அரவணைத்து போகின்ற ஒரு அரசியலை தான் செய்து கொண்டிருக்கின்றோம். நாளைகோ நாளன்டைக்கோ ஜனாதிபதி சந்திக்கின்றார். என்றொரு கேள்வி. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்திக்கப்போகின்றார்கள் அதற்குள்ளும் ஒரு பெரிய பிரச்சனை போகின்றது.

ஏனென்றால் ஜனாதிபதி தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேசி இனி ஒரு பிரயோசனமும் கிடையாது. அவர் பேசுவதற்கு வேறொன்றும் இல்லை வேறு வழியல்லை. மேற்கு நாடுகள் அங்கங்கு வரும் அழுத்தங்களுக்காக சும்மா போய் சாட்டுக்கு பேசுவது இது எல்லாருக்கும் தெரியும். தொடர்ந்தும் ஏமாந்த இடத்தில் போய் திரும்பவும் ஏமாறப்போகின்றார்கள் என்பது எங்களுக்கு தெளிவாக தெரிகின்றது. இப்ப எங்களை அழைத்திருக்கின்றார்கள் சர்வ கட்சி மாநாடு நாளை 23 ஆம் திகதி அழைப்பு வந்திருக்கின்றது. இந்த சர்வ கட்சி மாநாட்டிற்கு எங்களையும் ஆலோசனைகளை எழுத்தில் முதலில் தரட்டுமாம்.

ஆலோசனையை எழுத்தில் தருவது என்றால் முதலில் எங்களது மையத்தை எரித்ததற்கு பாவ மன்னிப்பு கேளுங்கள் என்று எழுத்தில் அனுப்ப வேண்டும். இப்பொழுது எல்லா இடத்திலும் தாராளமாக புதைக்கவிடுகின்றார்களே. சும்மா இரவோடு இரவா எல்லாம் நடந்துவிட்டது வேறு ஒன்றும் இல்லை ஜெனீவா செய்யும் வேலை. போன செப்டம்பரில் ஜெனீவாவில் பிரேரணை நிறைவேறப்போகின்றது அதற்காக இம்ரான்கானை கொண்டுவந்து வைத்து அவர் சொல்வதற்காக செய்த மாதிரி ஒரு நாடகத்தை காட்டி அந்த எரிக்கின்ற விடயத்திற்கு முடிவு தந்தார்கள். ஆனால் அவர்கள் கொரோனாவினால் மரணித்தால் ஓட்ட மாவடிக்குத் தான் தூக்கிக்கொண்டு ஓட வேண்டும்.

11 ஆம் பக்க பார்க்க...

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியில் குளிர்காயும் வல்லரசுகள் – சுரேஷ் பிரேமச்சந்திரன்



தற்போதைய நிலவரங்களைப் பார்க்கின்றபோது ஜனாதிபதி உட்பட அனைவரும் பொருளாதாரம் என்பது மிக மோசமான சூழ்நிலைக்குச் சென்றிருக்கிறது என்பதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர் தனது உரையில் தெளிவாகக் கூறியிருக்கின்றார் மக்கள் பெற்றோலுக்கும் எரிவாயுவிற்கும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கும் கஷ்டப்படுவதை தாங்கள் புரிந்திருப்பதாக கூறுகின்றார். ஆனால் கொவிட் மீதும் உக்ரேன் -ரஷ்யா சண்டையின்மீதும்பாரத்தைப்போட்டுவிட்டு தப்பிவிடவும் முயற்சிக்கிறார்கள். இதுதான் இருக்கக்கூடிய பிரச்சினை. எமக்கு அண்மையில் இருக்கும் மாலைதீவு எம்மைவிட மிகச்சிறிய நாடு. ஆனால் அந்த நாட்டினுடைய பொருளாதாரம் என்பது முற்றாக சுற்றுலாத்துறையிலே தங்கியிருக்கிறது. அந்த நாடு தனது பொருளாதாரத்தை வலிமையாக வைத்திருக்கிறபோது இலங்கை என்பது இரண்டு கோடி இருபது இலட்சம் மக்களைக் கொண்டதொரு நாடு. அது மாத்திரமல்ல பல வளங்களைக் கொண்ட நாடு. இவையணைத்தும் இருந்தும் கூட இலங்கையின் பொருளாதாரம் அதளபாதாளத்திற்குச் சென்றுள்ளது.

ஏறத்தாழ 55-60 பில்லியன் வரை சர்வதேசக் கடன் இருக்கிறது. இந்த வருடத்தில் சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகச் செலுத்தவேண்டியிருக்கிறது. கையிருப்பில் அவர்களிம் 2 பில்லியன் கூட இல்லை. இந்த நிலையில் இறக்குமதிகளைச் செய்வது எவ்வாறு கடன்களைக் கட்டுவது போன்ற பிரச்சினைகளுடன் இருக்கின்றார்கள். ஆகவே மக்களுக்கு அன்றாட பொருட்களை வாங்குவதற்காக இந்தியா தற்போது ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கியிருக்கின்றது. அதில் அவர்கள் சில விடயங்களைச் செய்யலாம். தற்பொழுது மீண்டும் சீனாவிடம் கடன் கேட்டிருக்கின்றார்கள். சர்வதேச நாணய நிதியம் வந்து சந்தித்திருக்கிறார்கள். இவ்வளவு நாளும் அவர்களிடம் கடன் பெறமாட்டோம் என்று கூறியவர்கள் இன்று அவர்களின் காலடியில் சென்று விழுந்திருக்கிறார்கள்.

ஆகவே அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கையை சரியான முறையில் திட்டமிடவில்லை என்பது வெளிப்படையான உண்மை. அரசில் உள்ள அமைச்சர்கள் தொடக்கம் அனைவரும் அரசாங்கத்தை குற்றம் கூறும் நிலையில் தான் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் இன்று எல்லாவற்றுக்கும் ஒட்டு மொத்த நாட்டு மக்களும் வரிசையில் நிற்கின்றார்கள். சமையல் எரிவாயு பெறவேண்டுமெனில் வரிசையில் நிற்கவேண்டும். பெற்றோல். டீசலுக்காக அதிகாலையில் மாத்திரமல்ல இரவிரவாக வரிசையில் நிற்கவேண்டும். உணவுப்பொருட்கள் கண்மூடித்தனமாக விலைகள் உயர்த்தப்படுகின்றது. இரண்டு மாதத்திற்கு முன்னர் 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பொருள் இன்று 200 ரூபாவுக்கு மேல் சென்றிருக்கிறது.

பால்மா. எரிவாயு. எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதனால் போக்குவரத்து விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பிற்கு ஏற்ப மக்களுக்கு வருமானம் இருக்கிறதா என்றால் இல்லை. ஓய்வூதியம் பெறுபவர்கள் எவ்வாறு அந்தப் பணத்தில் தமது வாழ்க்கையினைக் கொண்டு நடத்துவது. அரச ஊழியர்களின் சம்பளத்தில் எவ்வாறு வாழ்க்கையினை நடத்துவது. கூலித் தொழிலாளிகள் எவ்வாறு வாழ்க்கையினை நடத்துவது. எனவே அரசாங்கத்தின் கையில் எதுவும் இல்லை என்ற கணக்கில் அவர்கள் இருக்கிறார்கள். கடைகளைப் பொறுத்தவரை தாங்களே விலைகளை நிர்ணயிக்கிறார்கள். சீமெந்து. கட்டடப் பொருட்களின் விலைகள் எல்லாம் கடைக்காரர்களே நிர்ணயிக்கும் நிலையினைத் தான் நாங்கள் பார்க்கிறோம். சிங்கள மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த மக்களும் இந்த நாட்டில் வாழ முடியுமா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அரசாங்கத்தின் மீது கோபத்தில் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் தான் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு அனைத்துக் கட்சிகளும் இணைந்து தீர்வினைக் காண வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி தலைமையில் ஒரு சர்வ கட்சி மாநாடு கூட்டப்பட்டது. அது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையில் தான் அந்தக் கூட்டத்தைக் கூட்டினார்கள். ஆனால் பொதுஜன பெரமுனவின் ஆதரவுக் கட்சிகள் புறக்கணித்திருக்கிறார்கள். கலந்து கொள்ள மாட்டோம் என பொது வெளியில் கூடக் கூறினார்கள். ஜேவிபி. சஜித் தலைமையிலான கட்சி பகிஸ்கரித்தது. விக்னேஸ்வரன் ஐயாவின் கட்சி பகிஸ்கரித்தது. தமிழர் தரப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பகிஸ்கரித்திருந்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. ஐக்கிய தேசியக் கட்சி. பொதுஜன பெரமுன. தமிழரசுக்கட்சி. புளொட் கட்சிகள் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தன. இவர்கள் இன்னமும் தங்களால் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியும் என யோசிக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் வருடாந்தம் இவர்களுக்கான அந்நிய செலாவணிப் பற்றாக்குறை என்பது அதிகரிக்கிறதே தவிர. குறைந்தபாடில்லை. ஆகவே இவர்களால் மாத்திரமல்ல புதியதொரு அரசாங்கம் பதவியேற்றாலும் மாற்றங்களை விரைவாக இலகுவாக ஏற்படுத்திவிட முடியுமா என்கிற கேள்வி இருக்கிறது.


அந்த வகையில் யார் எதைக் கேட்டாலும் விட்டுக்கொடுத்து. சீனா எதைக் கேட்கின்றதோ அல்லது எந்த நாடு எதைக் கேட்கின்றதோ அதனை விட்டுக்கொடுத்து கடனைப் பெறுகின்ற போக்கில் தான் இந்த நாடு போய்க்கொண்டிருப்பதை எங்களால் பார்க்க முடிகின்றது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் ஊழல்கள் நடைபெற்றுள்ளது. வெள்ளைப்பூடு ஊழல். வெங்காய ஊழல் எல்லாம் நடைபெற்றிருக்கின்றது. சில பௌத்த பிக்குமார் இந்த அரசின் ஊழல் தான் அனைத்திற்கும் காரணம் எனப் பேசியிருக்கின்றார்கள். இந்த சூழலில் இந்த அரசாங்கத்தினால் மாற்றங்களைக் கொண்டு வர நிச்சயமாக முடியாது. நிதியமைச்சரால் முடியாது. நிதியமைச்சர் அதற்கு உகந்த அமைச்சரோ அல்லது அதனைப் பற்றி சிந்திக்கக்கூடிய புத்திகூர்மையுள்ள அமைச்சராக நான் கருதவில்லை.

அதேபோல ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் உண்மையாகவே தமது பதவிகளை இராஜினாமா செய்து ஒரு மாற்று அரசாங்கம் உருவாகுவதற்கு அவர்கள் வழிவிட வேண்டும். மாற்று அரசாங்கம் உடனடியாக எதையும் செய்யாதவிடத்தில் கூட சர்வதேச ஆதரவுகளைப் பெற்றுக்கொள்ள ஆட்சிமாற்றம் வழிவகுக்கலாம். அமெரிக்க. ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்புகளை மேற்கொண்டு அவர்களிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கலாம். தற்போதைய அரசாங்கத்திற்கு அந்த உதவிகள் ஓரளவுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது என்று கூறலாம். ஏனெனில் இவர்களது வெளிவிவகாரக் கொள்கையானது அதிகமாக சீன சார்பாக இருப்பதன் காரணமாக அமெரிக்க. ஐரோப்பிய நாடுகளின் உதவிகள் இவர்கள் எதிர்பார்த்தது போல இவர்களுக்குக் கிடைப்பதாக இல்லை.

என்னைப் பொறுத்தவரையில் இந்த நிலைமைகள் இலங்கையில் மாறவேண்டுமாகவிருந்தால் நிச்சயமாக அரசாங்கம் மாறவேண்டும். தற்போதைய ஜனாதிபதி. பிரதமர். நிதியமைச்சர் மற்றும் ஏனைய முக்கிய அமைச்சர்களினால் இந்த மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய சூழல் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இதனை அவர்கள் செய்யத்தவறினால் பாரியளவிலான போராட்டங்கள் நாட்டில் வெடிக்கும். பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெறலாம். எதிர்காலத்தில் இன்னும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.

ஆகவே அவற்றைத் தவிர்க்க வேண்டுமாகவிருந்தால் நான் நம்புகின்றேன் ஒரு மாற்று அரசாங்கத்தைக் கொண்டுவருவதன் மூலம் மாற்று பொருளாதாரத்திட்டம். மாற்று வெளிவிவகாரக் கொள்கை. மாற்றுச் சிந்தனைகள் புகுத்தப்பட்டால் குறைந்த பட்சம் பொருட்களுக்கானத் தட்டுப்பாடு நீக்கப்படும். விலை ஏற்றங்களைக் குறைக்க முடியுமோ எனக்குத் தெரியாது. தட்டுப்பாடு இல்லாமல் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான சூழல் உருவாக்கப்படுவதும் மக்களது வாழ்க்கைச் செலவு குறித்தும் அடுத்துவரும் அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வாய்ப்பு இருக்கிறது.





# தென்னிலங்கை அரசியலில் திருத்தம் வேண்டும்

இலங்கையினது அரசியல் என்பது பல்வேறு கூறுகளாகப் பிரிந்துள்ளது. வில்லியம் கோபல்லாவ தொடக்கம் தற்போதைய ஆட்சியாளர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவரை இலங்கைத் தீவினது அரசியல் என்பது பெரும் நெருக்கடிக்குள் நகர்த்தப்பட்டு வருகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. தேர்தல் காலங்களில் ஒரு அரசியலும், பின்னரான காலங்களில் இன்னொரு அரசியலும் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இலங்கையினது அரசியலமைப்புச் சட்டத்தினைக் கூட தமக்கு ஏற்றாற்போல பெரும்பான்மையை பாராளுமன்றில் பெற்றிருக்கக்கூடிய அந்தந்த காலங்களில் ஆட்சியிலிருந்த கட்சி திருத்தங்களை மேற்கொள்வது வழமையான விடயமாக மாறிப்போயுள்ளது. அரசியலமைப்புக்கு முரணாகவும் பல சம்பவங்கள் இடம்பெற்றமை பதிவாகியிருக்கின்றது. நீதிமன்றம் தலையிட்டு தீர்த்துவைத்த நிகழ்வுகளும் கடந்த காலங்களில் இலங்கையினது அரசியலில் ஏற்பட்டிருக்கிறது. வடகிழக்கில் பெரும்பான்மையாக வாழும் மக்கள் மத்தியில் வேறொரு அரசியல். தென்னிலங்கைச் சமூகம் முன்னெடுக்கும் அரசியல் என்பது வேறு. இலங்கையின் வாழும் மூவினங்களான சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் பாரபட்சமற்ற ஜனநாயக அரசியலை இலங்கையில் கடைப்பிடிக்க தென்னிலங்கையின் அதிகாரத் தலைமைகள் விடவில்லை. இனவாத சிந்தனைகள், பெரும்பான்மையினர் என்கின்ற பௌத்த மேலாதிக்க சிந்தனைகளின் வெளிப்பாடுகளால் தான் இந்த நாட்டில் யுத்த சூழல் கூட ஏற்பட்டது.

மனித உரிமை ஆர்வலர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சர்வதேச சமூகத்தினர் கடந்த பல தசாப்த காலங்களாக தென்னிலங்கையினது அரசியல் செயற்பாடுகள் குறித்து கேள்வியெழுப்பியே வருகின்றனர். இனங்களுக்கிடையில் பாரபட்சம் காட்டப்படுவதாக கூறுகின்றனர். நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பது தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டே வருகின்றது. ஆனால் இதுவரை காலமும் தென்னிலங்கையினது அரசியலில் மாற்றங்கள் வரவில்லை. இன்றும் அரசியல் நெருக்கடிகள் தொடர்கின்றது.

இந்த நாட்டின் அரசியல் என்பது சிங்கள பௌத்த மதத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களால் இந்த நாட்டின் அரசியல் கட்டியெழுப்பப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்யவும் உட்புகுத்தவும் நீக்கவும் பெரும்பான்மையினர் நினைத்தாலே செய்யலாம் என்கிற நிலை இருக்கின்றது. இந்த நாட்டில் வாழும் தமிழ் - முஸ்லீம் சிறுபான்மைச் சமூகங்களை எப்படியும் அடக்கியாளலாம் என்கிற நிலைப்பாடு. மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்த அரசுகள், இம் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை வழங்க மறுத்தே வருகின்றன. இவ் தென்னிலங்கை அரசியலால் தான் சிறுபான்மை மக்கள் சொல்லொனாத் துன்பங்களை தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர். சிறுபான்மை மக்களின் அபிவிருத்தி, அரசியல் இருப்பு, வாழ்வுரிமை என்பனவெல்லாம் இந்நாட்டில் பெரும் சிக்கல்களால் நிறைந்துள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் இந்த இனவாத சிந்தனையுடன் கூடிய தென்னிலங்கையின் ஒன்றுக்கும் உதவாத அரசியல் தான்.

இந்த நாட்டின் அரசியல் வெறுமனே ஜனாதிபதியுடன் தொடர்வது அல்ல. நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக சிங்கள மக்களையும் கடந்து, இலங்கையினது பௌத்த பீடங்கள் இருக்கின்றன. அவர்கள் கூறுவதைத்தான் நாட்டின் ஜனாதிபதியும் சிங்கள மக்களும் கேட்பார்கள். செயற்படுத்துவார்கள். அவர்களை மீறி ஒன்றும் நடைபெறாது என்பது கண்கூடு. குறிப்பாக இந்நாட்டில் இனப்படுகொலை நடந்திருக்கிறது. ஏராளமான தமிழ் மக்கள் வகைதொகையின்றி திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டதற்கும் இந்த தென்னிலங்கையின் அரசியல் தான் காரணமாக அமைந்தது.

கடத்தப்பட்டுக் காணாமல் போனோர், தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தென்னிலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் தமது தேவைக்கேற்ப பழிவாங்கல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி, அராஜகமான முறையில், தமிழ் இளைஞர் யுவதிகளை கடந்த காலங்களில் கைதுசெய்து விசாரணை என்கிற போர்வையில் வருடக்கணக்கில் துன்புறுத்தி இன்றும் அவர்கள் சிறைகளில் வாடுகின்ற சம்பவம் தொடர்பில் அறியாதவர் யாருமிலர். தமிழினம் சந்தித்த மனித உரிமை மீறல்கள் இந்த நாட்டில் அதிகம். ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள் எனப் பலர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். புலம்பெயர்ந்தார்கள். இவ்வாறான செயற்பாடுகளை கச்சிதமாக செய்தது யார்? தென்னிலங்கையின் அரசியல் தானே.

காலங்களும்ஆட்சியாளர்களும்மாறினார்களே தவிர, தென்னிலங்கையின் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்பது இந்நாட்டில் இன்னமும் மாறவில்லை. மாறி மாறி ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் தென்னிலங்கை அரசியலில் குழப்பங்கள் ஏற்பட்டு மாறி மாறி ஆட்சியைப் பிடித்துக் கொண்டார்களே தவிர, இந்நாட்டினது பொருளாதாரக் கொள்கையும் வெளிநாட்டுக் கொள்கையும் சிக்கலுக்குள் அகப்பட்டுள்ளது. தென்னிலங்கையின் அரசியல் பல துறைகளின் செயற்பாடுகளை முடக்கிப்போட்டது. நிறைவேற்று அதிகாரம் நாட்டைத் தலைகீழாக மாற்றியுள்ளது.

நாட்டின் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலை இந்த நாட்டின் அரசியலால் மாறியது. இன்றும் கறுப்பு ஜுலைக் கலவரம், யாழ் நூலகம் எரிப்பு சம்பவங்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் கருப்புச் சரித்திரங்களாகவே பதிவாகியிருக்கிறது. சிறுபான்மைச் சமூகங்கள் தங்களால் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் அல்லது அதிகாரப் பரவலாக்கல் குறித்து சிந்திக்க இந்நாட்டில் ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. மாறாக சர்வதேச நாடுகளினால் அரசிற்கு நெருக்கடிகள் வருகின்ற போது தமிழினத்தைப் பயன்படுத்தியது. தனது தேவைக்காக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தனர். தமது அரசியலின் இருப்புக்காக ஏனைய சிறுபான்மைச் சமூகங்கள் பயன்படுத்தப்பட்டன. போலியான வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்பட்டது. ஆனால் நடைமுறைச் சாத்தியப்பாடுகள் எதுவுமற்று இன்றும் தென்னிலங்கை அரசியலால் சிறுபான்மைச் சமூகங்கள் நெருக்கடிகளையே சந்திக்க நேர்ந்துள்ளது.

இன வாதம், மத வாதம், தேசிய வாதம் என்பது இந்நாட்டின் அரசியலில் ஊறிப்போயுள்ள விடயங்கள். இனவாதத் தீ இன்னமும் புகைந்து கொண்டு தான் இருக்கிறது என்பதற்கு ஆங்காங்கு இடம்பெறும் திட்டமிட்ட சம்பவங்கள் சிறந்த உதாரணங்கள். வடகிழக்கில் தமிழர்களின் நிலங்கள் இன்றும் பறிபோய்க்கொண்டிருக்கிறது. இராணுவ முகாம்கள், பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்களை திட்டமிட்டு ஏற்படுத்தி வருகின்றனர். தமிழர்களின் பூர்வீக நிலங்கள் இன்றும் அரசின் பிடியில் இருக்கிறது. காணிகளை இராணுவ கடற்படை முகாம்களுக்காக கையகப்படுத்தும் நடவடிக்கைகள், விகாரைகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் சில பௌத்த சிங்கள தேரர்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது. இதுவொரு சிங்கள பௌத்த நாடு. இங்கு எல்லாம் நாங்கள் தான் என்கிற சிங்கள மேலாதிக்க சிந்தனை இந்த நாட்டில் தென்னிலங்கை அரசியலில் இரத்தத்தோடு கலந்த விடயமாகவே உள்ளது. இவை தான் சிறுபான்மைச் சமூகங்களின் மீதான அடக்குமுறைகள் இன்றும் தொடர்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

கலகொட அத்தே ஞானசாரதேரர்என்பவர்கடந்த காலங்களில் தமிழ் மக்களின் விடயங்களில் எவ்வாறு அத்துமீறிச் செயற்பட்டார் என்பது அனைவருக்கும் தெரியும். அவரைப் போலவே மட்டக்களப்பில் ஒருவர். நீதிமன்றத்தைக் கூட அவமதிப்புச் செய்த குற்றச்சாட்டில் கைதான ஒருவரை அண்மையில் இந்நாட்டின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்து, தற்போது ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற செயலணிக்கு தலைவராகவும் நியமித்துள்ளார். இச் செயலணிக்கு தலைவர் பதவிக்கு இவர் உகந்தவரா? அல்லது இந்த கொள்கையை கடைப்பிடிக்கும் நிலையில் தென்னிலங்கையின் அரசியல் இருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. அன்றிருந்த தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் இன்று இல்லை என்கிறபோதும் மாற்றங்கள் இன்று கூறிக்கொள்ளும் அளவிற்கு ஏற்படவில்லை. மாறாக ஒரு சில கட்சித் தலைவர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களின் சிந்தனைகளில் மாற்றங்களைக் காண முடிகிறது. எனினும் அவர்களையும் செயற்பட முடியாத அளவிற்கு தென்னிலங்கையின் அரசியல் சாக்கடையாகிப்போயுள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் இனம் மற்றும் பாகுபாடு தொடர்பான சட்டங்களை இயற்றியுள்ள போதிலும், ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா) உருவாக்கிய முதல் குறிப்பிடத்தக்க சர்வதேச மனித உரிமைகள் கருவி, மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் (UDHR) ஆகும். UDHR ஐ ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 1948ல் ஏற்றுக் கொண்டது. UDHR மக்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டுமென்றால், அவை பொருளாதார உரிமைகள், கல்வி உட்பட சமூக உரிமைகள் மற்றும் கலாச்சார மற்றும் அரசியல் பங்கேற்பு மற்றும் சிவில் சுதந்திரம் ஆகியவற்றிற்கு உரிமைகள் தேவை என்று UDHR அங்கீகரிக்கிறது. இனம், வண்ணம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது மற்ற கருத்துகள், தேசிய அல்லது சமூக தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எந்தவொரு வகையிலும் வித்தியாசமின்றி இந்த உரிமைகள் அனைவருக்கும் உரிமை உண்டு என்று மேலும் கூறுகிறது. எனினும் இவ் சர்வதேச நியமங்கள் ஐ.நாவில் உறுப்பு நாடாகத் திகழும் இலங்கையின் அரசியலில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது கடந்தகால சம்பவங்களின் மூலமாக அறிந்துகொள்ளக் கூடியதாகவிருக்கின்ற உண்மைகளாகும். இனவாதத்தின் கீழ் தமிழினத்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதையும், முன்னுரிமை வழங்கப்படாததையும் காணலாம்.

தென்னிலங்கையின் அரசியல் இன்று போட்டியாக மாறியுள்ளது. மாறி மாறி குறைகளைக் கூறிக்கொண்டு ஆட்சியைப் பிடிப்பதையும் தக்கவைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இதற்காகவே இன மத தேசிய வாதங்கள் அதிகாரத்தில் இருப்பவர்களால் கையில் எடுக்கப்படுகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வெற்றி பெற்றதன் பின்னர், தான் தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றிபெற்றவன் என்கிற ரீதியில் கருத்துக்களை வெளியிட்டிருந்ததையும் நினைவுகூரத்தக்கது. தென்னிலங்கை அரசியலின் போக்குதான் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும் கூட காரணமாக அமைந்துள்ளது.

எனவே, குழப்பங்களால் நிறைந்துள்ள தென்னிலங்கையின் அரசியலில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது மறுக்கவியலாத உண்மை. சிறுபான்மைச் சமூகங்கள் தொடர்பான அவர்களின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் தேவை. இந்த நாட்டின் நிலையான அபிவிருத்தி, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், பொருளாதாரக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை என்பன தொடர்பில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் தென்னிலங்கைக் கட்சிகளின் நிலைப்பாடுகள் ஒரே நேர்கோட்டில் நிலையானதாக அமையவேண்டும். ஜனநாயக பண்புகளை பின்பற்றக்கூடிய சர்வதேச சட்டங்களை கடைப்பிடிக்கின்ற ரீதியில் மூவின மக்களையும் பாரபட்சமற்ற வகையில் வழிநடத்துகின்ற அரசியல் திருத்தங்கள் நிலையானதாக உருவாக்கப்படவேண்டும்.

!!ஆம் பக்கம் பார்க்க...
சுழியோடி

# சர்வகட்சி மாநாடும், கட்சிகளின் புறக்கணிப்பும் – பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு சாத்தியமா?



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உரிய தீர்வினைக் காண்பதற்காக கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் கடந்த 23ஆம் திகதி சர்வகட்சி மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு கட்சிகள் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். இதேவேளை எதிர்க் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 கட்சிகளில் 07 கட்சிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என அறிவித்திருந்தன. எனினும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மாநாட்டினை புறக்கணித்திருந்த நிலையில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட், அதேபோல பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் இம் மாநாட்டினை புறக்கணித்திருந்த நிலையில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் அவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இதேவேளை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் போன்றோர் இம் மாநாட்டினைப் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அவர்களின் ஆதரவு கட்சிகள் மக்களை பாரியளவில் ஒன்றுதிரட்டி கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தும் செய்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியினர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். நாட்டில் பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் வேண்டும். மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், விலைகள் உயர்வு, அத்தியாவசியப் பொருட்களுக்கானத் தட்டுப்பாடு, குடும்ப அரசியல் என்பவற்றைக் கண்டித்து இந்தப் போராட்டங்கள் வலுத்து வருவதைக் காண்கிறோம். அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்கா தலைமையிலான கட்சியினர் தமது பலத்தை நிரூபித்து வருகின்றனர். உடனடியாக நாட்டை விட்டு பதவிவிலகிச் செல்லுமாறு வலியுறுத்தப்படுகின்றது. இவர்களால் தான் எமது நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளம் நோக்கிச்செல்வதாக மக்கள் குரலெழுப்பி வருகின்றனர். மக்களால் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதி இன்று மக்களது கருத்தைக் கேட்டு பதவி விலகவேண்டும் என நாட்டின் தென்னிலங்கையில் போராட்டங்கள் நாளுக்கு நாள் உக்கிரமாக நடைபெற்றுவருகிறது. நாட்டை கட்டியெழுப்புவதற்காக மக்கள் அரசாங்கத்தை உருவாக்குவோம் என்கிற தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியினர் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை பாராளுமன்றத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுவருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. இவ்வாறான நாட்டின் இக்கட்டான சூழலில் நாட்டு மக்களுக்குத் தெளிவான பதில் எதுவும் அரசாங்கத்தினால் வழங்கப்படுவதில்லை. பாராளுமன்றில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் வழங்க அரச தரப்பினர் தயாராகவும் இல்லை. நிதியமைச்சர் பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்காமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் சீற்றமடைந்துள்ளன. நாட்டில் இன்று செய்யப்படும் சர்வதேச ஒப்பந்தங்கள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதோ அல்லது அது தொடர்பில் உரிய முறையில் தெரியப்படுத்துவதோ, நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தாமை கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. கொவிட் வைரசுக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி, ரஷ்யா - உக்ரைன் யுத்தத்தினால் இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள சிக்கல், தொடர்ச்சியாக சர்வதேச நாடுகளிடம் பெறப்படும் பில்லியன் கணக்கிலான கடன்கள் தொடர்பில் நாட்டில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பில் வினவப்பட்ட கேள்வியொன்றுக்கு பதில் வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்கா அவர்கள், தேசிய மக்கள் சக்திக்கு இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த சர்வகட்சி மாநாடு அத்தருணத்தில் நடாத்தப்படுவது அரசாங்கத்தின் அரசியல் நெருக்கடியைத் தணித்துக் கொள்வதற்காகவேயன்றி நாட்டின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அல்ல. அரசாங்கத்திலிருந்து இரண்டு அமைச்சர்கள் நீக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியர்களுடன்ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த சர்வகட்சி மாநாடு முன்மொழியப்பட்டது. எனவே இந்த பிரேரணை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுஜன முன்னணியின் நெருக்கடி காரணமாக மாத்திரம் முன்மொழியப்பட்டதாகும். அதற்கு முன்னர் அத்தகைய பெருந்தொகையான சர்வகட்சி மாநாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கொவிட்டின்போது அவ்வாறான சர்வகட்சி மாநாடொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அது ஓர் அழுதுபுலம்புகின்ற மாநாடாக மாறியே முடிவடைந்தது. அரசாங்கம் தனது நிகழ்ச்சிநிரலை தொடர்ந்து முன்னெடுத்து வந்தது. அத்தகைய சர்வகட்சி மாநாடு என்பது அரசாங்கத்தின் நெருக்கடியை நியாயப்படுத்த மேலே பூசப்படுகின்ற ஐசிங் மாத்திரமே. சர்வகட்சி மாநாடொன்றினை நடாத்தி நாட்டின் பொருளாதாரம் பற்றிப் பேசுவதாயின் இத்தருணத்தில் பொருளாதாரம் பற்றிய உண்மையான நெருக்கடியை அரசாங்கத்திடம் முன்வைக்கவேண்டும்.

பொருளாதாரம் சம்பந்தமாக சர்வதேச நாணய நிதியம் சமர்ப்பித்த அறிக்கை பற்றி, நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கம் பற்றிய தகவல்கள், அண்மைக்காலத்தில் பெறப்பட்ட கடன்கள் பற்றிய மேலதிக விபரங்கள் பற்றி இந்நாட்டு மக்களுக்குத் தெரியாது. அதைப்போலவே இந்தியாவிடமிருந்து பெறப்படுகின்ற ஒரு பில்லியன் டொலர் மற்றும் இந்தியாவுக்கு நாட்டின் வளங்களைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகள் பற்றி நாட்டுக்குத் தெரியாது. அத்தகைய பொருளாதாரம் பற்றிய அனைத்து தகவல்களையும் மூடிமறைத்து பொருளாதாரம் சம்பந்தமாக நடாத்துகின்ற சர்வகட்சி சந்திப்பு ஒருபோதுமே நியாயமானதாக அமையமாட்டாது. இற்றைக்கு ஏறக்குறைய ஒன்றரை வருடங்களுக்கு முன்னராகவே நாங்கள் இத்தகைய பேச்சுவார்த்தையொன்றின் முக்கியத்தவத்தை வலியுறுத்தினோம். ஆனால் நெருக்கடி வளர்ந்து வெடித்துச் சிதறிய பின்னர் அது சம்பந்தமாக கலந்துரையாட எமக்கு அழைப்பு விடுப்பது பயனற்ற செயலாகும். எனவே இந்த விடயங்களை அடிப்படையாகக்கொண்டு தேசிய மக்கள் சக்தி சர்வ கட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லை அதைப் போலவே ஜனாதிபதியோ அரசாங்கமோ இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கொண்டுவருவார்கள் என்ற கனவில் நாங்கள் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இம் மாநாட்டில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள், போர் முடிந்த பிறகும் கூட கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை. அரசியல் சட்டத்திருத்தம், இனப்பிரச்சினை சம்பந்தமாக எங்களுக்கும் சர்வதேசத்திற்கும் கொடுத்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே நாடு முன்னேற வேண்டுமாகவிருந்தால் பொருளாதாரத்தில் திருப்புமுனையைக் காணவேண்டுமாகவிருந்தால் கொடுக்கின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும். அதிகாரப்பகிர்வு, தமிழ் தேசியப் பிரச்சினைக்கானத் தீர்வு முதலில் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்கின்றபோது புலம்பெயர் தேசங்களின் முதலீடுகளும் இந்நாட்டு வருவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு. இதனை நாங்கள் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் மேற்குல நாடுகளில் பொதுவாக கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சுவிஸ் போன்ற நாடுகளில் பலமாக இருக்கும் தமிழ் மக்களை இந்த நாடு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். சாதாரண மக்கள் பயப்படுகிறார்கள். இந்த வங்கிகள் ஊடாக டொலர் மூலமாக பணத்தைப் பெற்றுக்கொள்கின்ற போது அவர்கள் வினவுகின்ற விபரங்களின் அச்சம் காரணமாக, வங்கிகள் ஊடாக பணம் அனுப்ப புலம்பெயர் தமிழர்கள் பயப்படுகிறார்கள் என பாராளுமன்றில் சார்ள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்.

நாட்டினது சூழலைக் கருத்திற்கொண்டு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியற் கட்சிகளையும் கலந்துகொள்ள வலியுறுத்திய இந்த சர்வகட்சி மாநாட்டினால் நாட்டினது பொருளாதாரம் வளர்ச்சி பெறுமா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். தற்போதைய நாட்டினது அரசியல் குழப்பங்களை மக்களை திருப்திப்படுத்தவே இந்த மாநாடு என்கின்றனர் பலர். அரசிலிருந்து விலகிய அமைச்சர்களான விமல் மற்றும் உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அவர்கள் மகாநாயக்கர்களைச் சந்தித்து பாராளுமன்றில் இந்த அரசின் பெரும்பான்மைப் பலத்தை இல்லாமல் ஆக்க வேண்டும் என்பது தொடர்பிலும் கலந்துரையாடியிருக்கின்றனர். நிதியமைச்சர் தான் இன்றைய இலங்கையின் நிலைக்குக் காரணம் எனவும் அவரை அமெரிக்காவுக்கே திரும்ப அனுப்ப வேண்டும் என பகிரங்கமாகவே பொது வெளியில் கருத்துத்தெரிவிக்கின்றனர்.

அந்த மாநாட்டில் பெருமளவிலான கட்சிகள் கலந்துகொள்ளவில்லை என்பதிலிருந்தே இந்த அரசின் இயலாமை குறித்த நிலைப்பாடு அம்பலமாகியுள்ளது. அங்கு தெரிவிக்கப்பட்ட, கலந்துகொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளின் கருத்துக்கள் அனைத்தும் ராஜபக்ஷவின் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படுமா? நடைமுறைப்படுத்தப்படுமா? என்பதெல்லாம் கேள்விக்குறியானவை. இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா, சவுதி அரேபியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என அரசின் கடன் திட்டம் தொடர்கின்றது. இந்தக் கடன்களுக்காக மறைமுகமாக சர்வதேச ஒப்பந்தங்கள் போடப்படுகின்றது. இந்த சர்வகட்சி மாநாட்டிலும் ரணில் விக்ரமசிங்க அவர்கள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் கருத்துடன் முரண்பட்டதையும், பின்னர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ IMF இன் அறிக்கை தொடர்பில் ரணில் அவர்களுடன் வாக்குவாதப்பட்டதையும் காண முடிந்தது. இறுதியில் மத்திய வங்கியின் ஆளுநரின் கருத்துக்கள் ரணில் அவர்களை புண்படுத்தும்படியாக அமைந்திருந்தால் அதற்கு ஜனாதிபதி மன்னிப்பும் கோருவதாக தெரிவித்திருந்தார்.

இந்த மாநாடு என்பது அர்த்தமற்ற ஒன்றாகவே எதிர்க்கட்சிகளால் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் கட்சிகள் ஒவ்வொன்றின் கொள்கைகள் என்பது வேறு. அரசின் இன்றைய நிகழ்ச்சி நிரலும் கொள்கையும் செயற்பாடும் வேறானது. குடும்ப அரசியல் என்பது அரசிற்குள் தலைதூக்கியதால் தான் பங்காளிக் கட்சிகள் அரசைவிட்டு விலகுகின்ற நிலைமை உருவாகியுள்ளது. அரசிற்கு எதிராக அரச தரப்பினரே கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டிற்கென கொள்கைகளை வகுத்து ஒருமித்து செயற்படுகின்ற போதுதான் இன்று நாடு எதிர்கொள்ளும் சவால்களை ஓரளவேனும் சமாளிக்க முடியும். இதற்கு தென்னிலங்கையின் கட்சிகள் ஒருபோதும் தயாராக இல்லை.

மாறி மாறி ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் அனைவரும் செயற்படுகின்றரே தவிர, இ.ன்றைய நெருக்கடியான தீர்வுக்கு வழி சொல்பவர்கள் இல்லை. அவர்களின் மாற்றுத்திட்டங்களை மக்கள் மத்தியில் முன்வைக்கவும் தயாராகவில்லை. குறைகூறிக்கொண்டு வாக்களித்த மக்களை வீதிகளில் இறக்கியுள்ளனர். புதிய அரசு வந்தாலும் உடனடியாக இலங்கையின் பொருளாதாரத்தினை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டுசெல்வது கடினம். நீண்ட காலங்கள் தேவைப்படலாம். அதற்கென நீண்டகால ஒருமித்த நிலையான வேலைத்திட்டங்கள் அவசியம். வலியுறுத்தப்படும் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள், ஏனைய புலம்பெயர் தரப்பினரின் முதலீடுகள் குறித்து இலங்கையின் அரசு சிந்திக்குமா?, மேலும் மேலும் கடன்களைப் பெற்று இந்நாட்டினை இவ்வரசு நடத்த முடியுமா?, கடன்களை மீளச் செலுத்தவேண்டிய நிலையினையும் கவனத்திற்கொள்ளவேண்டிய சூழல் இருக்க, இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கானத் தீர்வும், மூவினங்களுக்கிடையிலான நல்லிணக்கமும், பௌத்த மேலாதிக்க சிந்தனைகளில் ஏற்படும் மாற்றமும் இந்நாட்டினை வளப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமையும் என்பது நிதர்சனம்.



# பிராந்திய செய்திகள்



## ரஷ்யாவில், இலங்கை தேயிலைக்கான கேள்வி குறையவில்லை

ரஷ்யாவில் இலங்கை தேயிலைக்கான கேள்வி உள்ளபோதிலும் அதனை ஏற்றுமதி செய்வதில் இலங்கை நெருக்கடியில் உள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான யுத்தம் இடம்பெற்ற போதிலும் இலங்கை தேயிலைக்கான கேள்வி குறையவில்லை என இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. மாற்று வழிகளை பயன்படுத்தி சிரமங்களுக்கு மத்தியில் இலங்கை, ரஷ்யாவிற்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதாக தேயிலை சபை தலைவர் ஜயம்பதி மொல்லிகொட தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்று வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## வீடுகளில் பெற்றோல் சேமித்து வைப்பது ஆபத்தானது

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியுடன் வீடுகளில் பெற்றோலை சேமித்து வைப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வீடுகளில் பெற்றோலை சேமித்து வைப்பது மிகவும் ஆபத்தானது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணர் கயான் முனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் அன்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நாட்களில் பெற்றோல் போன்ற எரிபொருட்களினால் ஏற்படுகின்ற தீச் சம்பவங்கள் காரணகாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரண்டு நாட்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் உயிரிழப்பதாகவும், நாளாந்தம் 4 முதல் 6 வரையான விபத்துக்கள் பதிவாகி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






## வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக மாத்தறைப் பெண்கள் வீதியில் ஆர்ப்பாட்டம்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாவிஸ்தரி பெண்கள் அமைப்பினால் மாத்தறையில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாத்தறை, தெவிநுவர, கந்தர மற்றும் வெலிகம பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் குழுவொன்று கலந்து கொண்டது.

## கடவத்தையில் இருவர் சுட்டுக் கொலை

கடவத்தையில் அன்று(03.24) இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கொழும்பு-கண்டி பிரதான வீதியில் மஹர ஒன்பதாம் மைல்கல்லில் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். படுகாயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், கிரிபத்கொட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 30 மற்றும் 31 வயதுடைய பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இரு கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் தாக்குதல் நடந்திருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை கடவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அவசரவேண்டுகோளை விடுத்தது இலங்கை - 40,000 தொன் டீசலை வழங்குகின்றது இந்தியா

இலங்கை விடுத்த அவசரவேண்டுகோளை தொடர்ந்து இந்தியா 40000 தொன் டீசலை வழங்க தீர்மானித்துள்ளது. கடும் எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை 500 மில்லியன் கடன்உதவியின் கீழ் வழங்கப்படவுள்ள மாதாந்த எரிபொருள விநியோகத்திற்கு மேலதிகமாக அவசரமாக டீசலை வழங்குமாறு இலங்கை விடுத்த வேண்டுகோளை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது என இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஐஓசி இலங்கைக்கு 40,000 எரிபொருளை விரைவில் வழங்கவுள்ளது என இந்த விவகாரங்களுடன் தொடர்புடையவர்கள் தெரிவித்துள்ளனர். உக்ரைன் நெருக்கடியால் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் இந்தியா இலங்கையின் அவசரவேண்டுகோளை ஏற்றுக்கொண்டுள்ளது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த சில வாரங்களாக எரிபொருளிற்கு திடீர் - மோசமான பற்றாக்குறை நிலவுவதன் காரணமாகவே இலங்கை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் உள்ளூர் தேவைகளை கருத்திலெடுத்த பின்னர் இலங்கைக்கு தேவையான டீசலை அனுப்புவது குறித்து ஆராயப்படுகின்றது, இவற்றை அனுப்புவதற்கான கப்பல்களை ஏற்பாடு செய்வதும் பிரச்சினையாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து எழுப்பியகேள்விகளிற்கு உரிய அமைச்சோ அல்லது ஐஓசியோ பதிலளிக்கவில்லை என தெரிவீத்துள்ள இந்திய ஊடகம் உக்ரைன் மீதான ரஸ்யாவின் தாக்குதலை தொடர்ந்து உருவாகியுள்ள புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக விநியோக வழிமுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன குறிப்பாக எரிபொருள் விநியோகத்திற்கான விநியோக வழிமுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன என பெயர் குறிப்பிடவிரும்பாத வர்த்தக அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய கடன் திட்டத்தின் கீழ் நாட்டிற்கு மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை!



இந்திய கடன் திட்ட நிதியுதவியுடன் தனியார் துறை வழியாக மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அரச மருத்துவத் தயாரிப்பு மற்றும் ஒழுங்குமுறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. மருந்து இறக்குமதியாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ உற்பத்தி மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளரான வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் வரியின் கீழ் அரச வைத்தியசாலைக்கு மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கையின் 85% மருந்துகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. டொலர் தட்டுப்பாடு காரணமாக மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது கடந்த வாரத்தில் மாத்திரம் 733 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 12,034 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். நாடளாவிய ரீதியில் 47 சுகாதார வலயங்கள் டெங்கு அபாய வலயங்களாக இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## 12 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

கிளிநொச்சி இரணைதீவு கடல் பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 07ம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரணைதீவு கடல் பகுதியில் அன்று (24) அதிகாலை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற ஒரு விசைப்படகையும் அதிலிருந்து 12 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படனர்.

அன்று (24) பிற்பகல் 4.28 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார முன்னிலையில் நீதவான் அறையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த 12 பேரையும் எதிர்வரும் 07 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# சினிமா துளிகள்



## மெக்சிகோவிற்கு சுற்றுலா சென்றிருக்கும் திரிஷா

முன்னணி நடிகர்களுடன் ஜோடி சேர்ந்து பல படங்களில் நடித்து இன்னும் கதாநாயகியாக நடித்து வரும் திரிஷா மெக்சிகோவிற்கு சுற்றுலா சென்றிருக்கிறார்.



தமிழ் சினிமாவில் தொடர்ந்து 20 வருடங்களுக்கும் மேலாகப் பேசப்படும் நடிகையாக வலம் வருபவர் திரிஷா. மிஸ் சென்னையாகத் தேர்வு செய்யப்பட்ட திரிஷா, அதனைத் தொடர்ந்து சிம்ரன், பிரசாந்த் நடிப்பில் வெளியான ஜோடி படத்தில் சிம்ரனின் தோழியாக திரையுலக பயணத்தைத் தொடங்கினார்.

தற்போது வரை பொன்னியின் செல்வன் படத்தில் நடித்து வருகிறார். மேலும் இவரது நடிப்பில் உருவாகி இருக்கும் கர்ஜனை, ராங்கி, சதுரங்க வேட்டை 2 உள்ளிட்ட படங்கள் ரிலீஸ் ஆக இருக்கிறது. தனது 20 வருட திரைப்பயணத்தை சமீபத்தில் நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார் திரிஷா.

தற்போது திரிஷா மெக்சிகோ சென்றிருக்கிறார். அங்கு நண்பர்களுடன் ஜாலியாக வலம் வரும் புகைப்படங்களை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவு செய்திருக்கிறார். இதற்கு ரசிகர்கள் பலரும் லைக்குகளை குவித்து வருகிறார்கள்.

## பீஸ்ட் படத்தின் புதிய அப்டேட்.. மகிழ்ச்சியில் ரசிகர்கள்

விஜய் நடிப்பில் உருவாகி இருக்கும் பீஸ்ட் திரைப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள பீஸ்ட் படத்தை சில தினங்களுக்கு முன்பு தணிக்கை குழுவுக்கு அனுப்பினர். பட தணிக்கை குழு உறுப்பினர்கள் அதைப்பார்த்து தற்போது 'AV' சான்றிதழ் வழங்கி உள்ளனர். பீஸ்ட் படம் 2 மணி நேரம் 35 நிமிடங்கள் ஓடக்கூடியது என்று படத்தின் நீளத்துக்கான நேரத்தையும் தணிக்கை குழு வெளியிட்டு உள்ளது.

பீஸ்ட் படம் ஏப்ரல் 13ஆம் திகதி திரைக்கு வருகிறது. சமீபத்தில் பீஸ்ட் படத்தில் இருந்து வெளியான இரண்டு பாடல்களும் ரசிகர்களை கவர்ந்து நல்ல வரவேற்பை பெற்றது. விஜய் அடுத்ததாக, தெலுங்கு இயக்குனர் வம்சி இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். இது விஜய்க்கு 66-வது படம். தமிழ், தெலுங்கு மொழிகளில் இந்த படம் தயாராகிறது. படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ள இப்படத்தில் வில்லனாக நடிக்க பிரபல இந்தி நடிகர் விவேக் ஓபராயிடம் பேசி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.






## ஜென்டில்மேன்-2 படத்தின் கதாநாயகியை அறிவித்த படக்குழு

1993-ஆம் ஆண்டு இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் வெளியான முதல் திரைப்படம் 'ஜென்டில்மேன்'. இப்படத்தில் அர்ஜுன், மதுபாலா, கவுண்டமணி, செந்தில், மனோரம்மா உள்ளிட்ட பல நடிகர்கள் நடித்திருந்தனர். ஏ.ஆர். ரஹ்மான் இசையில் வெளியான இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் இரண்டாம் பாகத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்களுக்கு தயாரிப்பாளர் கே.டி.குஞ்சுமோன் சமீபத்தில் அறிவிப்பை வெளியிட்டு ஆச்சரியப்படுத்தி இருந்தார். அதன்படி ஜென்டில்மேன்-2 படத்தை அடுத்ததாக தயாரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

நீண்ட இடைவேளைக்கு பிறகு கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் ஜென்டில்மேன்-2 படத்திற்கு கீரவாணி இசையமைக்கவுள்ளார். இப்படத்தில் நடிக்கவுள்ள கதாநாயகி குறித்து சமூக வலைத்தளங்களில் பேசப்பட்டு வந்தது. தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக இருக்கும் நயன்தாரா இதில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகி வந்தது. இந்நிலையில் ஜென்டில்மேன்-2 படத்தில் நடிக்க நயன்தாரா சக்கரவர்த்தி ஒப்பந்தமாகிவுள்ளதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது படக்குழு. இவர் இப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமாக உள்ளார்.

தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில் நயன்தாரா சக்கரவர்த்தி குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நடிகர் விஜய் சேதுபதியின் "மாமனிதன்" படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்பு

*தர்மதுரை திரைப்படத்திற்குப் பிறகு டைரக்டர் சீனு ராமசாமி இயக்கத்தில் ,நடிகர் விஜய் சேதுபதி நடித்துள்ள திரைப்படம் "மாமனிதன்". இந்த திரைப்படத்தை யுஎஸ்ஆர் பிலிம்ஸ் சார்பாக யுவன் சங்கர் ராஜா தயாரித்துள்ளார்.*

*மேலும், இந்தப் படத்திற்கு இளையராஜா மற்றும் யுவன் சங்கர் ராஜா இருவரும் இணைந்து இசையமைத்துள்ளனர். எம். சுகுமார் இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.*

*இந்நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு அறிவித்துள்ளனர் .அதன்படி மாமனிதன் திரைப்படம் வருகிற மே மாதம் 6ம் திகதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளனர்*



## நடிகை மீரா மிதுனுக்கு பிடிவாரண்ட்

*பட்டியலினத்தவர் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் நடிகை மீரா மிதுனுக்கு பிடிவாரண்ட்.*

*8 தோட்டாக்கள், தானா சேர்ந்த கூட்டம் உள்ளிட்ட படங்களில் நடித்த மீரா மிதுன். இவர் பட்டியலினத்தவர்கள் குறித்து அவதூறு கருத்து தெரிவித்த வழக்கில், விசாரணைக்கு ஆஜராகாததால் பிடிவாரண்ட் பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*



*மீரா மிதுனை கைது செய்து வருகிற ஏப்ரல் 4 ஆம் திகதி ஆஜர்படுத்த மத்திய குற்றப்பிரிவுக்கு முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

## டாப்சி பகிர்ந்த காதல் அனுபவம்



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக உயர்ந்த டாப்சி தற்போது இந்தி பட உலகிலும் பிரபல நடிகையாக இருக்கிறார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்கிறார். இந்நிலையில், தனது இளம் வயது காதல் அனுபவங்களை டாப்சி பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து டாப்சி அளித்துள்ள பேட்டியில், "சிறுவயதிலேயே எனக்கு படிப்பில் அதிக ஆர்வம். நான் முதல் பெஞ்ச் மாணவி. அப்போது கண்ணாடி, ரெட்டை ஜடை, பற்களுக்கு கிளிப் என்று பார்க்கவே நான் ஒரு மாதிரியாக இருப்பேன். கல்லூரி நாட்களில் பலர் மீது எனக்கு ஈர்ப்பு இருந்தது. யாராவது கண்ணுக்கு அழகாக தெரிந்தால் அவனை காதலிப்பதுபோல் நினைத்து கொள்வேன். அந்த ஈர்ப்பு ஒருமாதம்தான் இருக்கும். அடுத்த மாதம் இன்னொருவன் மீது ஈர்ப்பு ஏற்படும். இப்படி எனது ஆண் நண்பர்கள் பெயர் மாதம் ஒருமுறை மாறிக்கொண்டே இருக்கும்.

ஆனால், யாரையும் நெருங்கி சென்று உன்னை காதலிக்கிறேன் என்று சொன்னது இல்லை. ஒரு நாள் ஒரு பையனோடு 'டேட்டிங்' சென்றபோது அவன் திருமணம், குழந்தைகள், வாழ்க்கை என்றெல்லாம் பட்டியல் சொல்ல ஆரம்பித்தான். எனக்கு பயமாகிவிட்டது. அன்று முதல் அவனுடன் செல்வதையும் தவிர்த்துவிட்டேன்" என்றார்.

# இலங்கை கலைஞர்களுக்கும் வாய்ப்பளிப்பேன் நடன இயக்குனர் கலா மாஸ்டர் உடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவார தாடர்ச்சி...

**கேள்வி : நடிகர்களுக்கு கூடுதலாக நடனக்கலையை நீங்கள் பயிற்றுவிக்கும் பொழுது உங்களுடைய மனோநிலை அதாவது நானொரு நடிகையாக வரவேண்டும் என்ற சிந்தனை உங்களுக்கு ஏற்படவில்லையா?**

பதில் : இல்லை இதுவரை வரல. எல்லா ஹீரோ ஹிரோயின்ஸ்ம் என்னோட பிரண்ட்ஸ்தான். அதிலும் குறிப்பா எங்களோட குடும்பம் சினிமா குடும்பம் தான். எங்க வீட்டில் கிட்டத்தட்ட 5 கொரியோகிரபிக்ஸ் இருக்காங்க. அதனால எங்களோட குடும்பத்தில் எல்லா ஹீரோ ஹீரோயின்ஸ்ம் எங்களோட பிரண்ட்ஸ். ஒரு அக்கா தம்பி மாறிதான் பழகிட்டு இருக்கிறோம். எனவே அப்பிடி இருக்கும் பொழுது எனக்கு ஆசையில்லை. என்ன பாலச்சந்தர் சேர் ஒரு பாத்திரத்தில் நடிக்க கூப்பிட்டாரு நான் நடிக்கல, PC சிறிராம் சேர் ஒரு விருதுப் படம் இருக்கு அதில நடிக்க சொல்லி கேட்டாரு அப்பவும் நான் நடிக்கல.

ஆனால் இப்ப நான் நடிச்சன் உங்களுக்கு தெரியும் காத்துவாக்குல 2 காதல் விஜய் சேதுபதி, நயன்தாரா மற்றும் சமந்தாவின் படத்தில் எனக்கு நயன்தாரா ரொம்ப பிடித்த பெண் ரொம்ப நல்ல பிரண்ட் அவங்க என்னட வந்து விக்கி உங்ககிட்ட பேசனும் என்டு சொன்னாங்க விக்கி கதை சொன்ன விதம் நீங்க பன்ன மாட்டீங்க ஆனா நான் ஒரு கதை சொல்லுறேன் என்று சொன்னவுடனே நான் 2 நாள் டைம் கேட்டேன். யோசிச்சன் நான் இதை மட்டும் நான் விட்டிருக்கேன் லைப்ல மற்ற எல்லாவற்றையும் நான் அடைஞ்சிட்டன் இத ஏன் விடனும் இதையும் பன்னி பார்க்கலாமே என்று யோசிச்சன்.

ஆனா நான் அவர்கிட்ட சொன்னன் எனக்கு டயலக் எல்லாம் பேசத்தெரியாது ஏன்னா நாங்க ஒரு சினிமா நடனக்கலைஞரே தவிர மனப்பாடம் பன்னி டயலக் பேசத் தெரியாது என்று சொன்னன். ஆனா ரொம்ப அழகா என்ன எடுத்துக்கொண்டு போனாரு ரொம்ப சந்தோஷமா இருந்தது விஜய் சேதுபதி சேர், சமந்தா, நயன்தாரா எல்லாரும் எனக்காக ரொம்ப நாள் கோப்ரேட் பன்னினாங்க. ஆனா அது எனக்கு முதல்படி தான். சினிமாவில B.Com X M.Com X MD X, முடிச்சிருக்கலாம் ஆனா நடிகை என்று சொல்றது நான் பெர்ஸ்ட் ஸ்டான்டட் தான் படிக்கிறேன். எக்ஸ்பீடியன்ஸ் எவ்ளோ இருந்தாலும் எனக்கு நடிப்பு பெர்ஸ்ட் ஸ்டான்டட் தான். எனக்கு வந்த அழகான பாத்திரம் விஜய் சேதுபதியோட காமினேசன்ஸ் நயன்தாராவின் காமினேசன்ஸ் வரும் போது இந்த சான்ஸ் இப்ப எனக்கு பிடிச்சதனால நான் நடிச்சன்.

**கேள்வி : ஆய கலைகள் 64 என்று கூறுவார்கள் அதிலே உங்களுடைய இயலிசை நாடகம் ஆடலுடன் பாடலை கேட்டு ரசிப்பதிலே ஒரு சுகம் என்று கூறுவார்கள். அது போன்று நீங்கள் இந்த நடனத்துறையிலே எதனை சாதிக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்?**

பதில் : எனக்கு சாதிக்கனும் என்றதை விட நான் ஒரு பெண் எவ்வளவு தூரம் வளர முடியும் என்று நான் சாதிக்கனும்னு ஆசப்படுறேன். அடுத்து என்னுடைய கலையை நான் நிறைய பேருக்கு கத்துக்கொடுக்கனும் என்டு ஆசப்பட்டன். ஏன்னா நாம மட்டும் தான் டான்ஸ் மாஸ்டரா இருக்கனும் என்ற எண்ணம் கிடையாது. என்னுடைய கலையை உருவாக்க உருவாக்க ஒரு ஆலமரமாக வரவேண்டும். ஒரு உதாரணமா சான்டியை எடுத்துக்கொள்ளுங்க. சான்டி வரும் போது ஒரு நோர்மல் டான்சரா தான் வந்தான் எவ்ளோ கஷ்டப்பட்டு வந்தவன் இப்ப ஒரு இடத்தில இருக்கும் போது யாருக்கு சந்தோஷம் குருவுக்கு தான் சந்தோஷமா இருக்கும்.

என்னை பொறுத்தவரைக்கும் என் கலையை நிறைய பேருக்கு கத்துக்கொடுக்கனும். நான் இல்லாத காலத்துல இந்த கலை கலாமாஸ்டர், நான் கலா மாஸ்டரோட சிஸ்யை என்று சொல்லனும். என்னால முடிந்த வரை இந்த



கலையை எவ்ளோ பேருக்கு பரப்ப முடியுமோ அந்தளவுக்கு பரப்பனும் என்டு தான் எனக்கு ஆசை.

**கேள்வி : கலா மாஸ்டரை பொருத்தவரையிலே மானாட மயிலாட போன்ற நிகழ்ச்சிகளை பார்க்கின்ற பொழுது அதிலுள்ள ஒடியன்சை நீங்கள் உற்சாகமூட்டும் வகையிலே உங்களுடைய எக்ஸ்பிரசன்ஸ் கூடுதலாக உள்ளது. ஆனால் நடனத்திலே சில கடினமான விடயங்களை அவர்கள் உட்புகுத்தும் பொழுது நீங்கள் உண்மையிலே கண் கலங்குகின்றீர்கள் அது உண்மையில் நீங்கள் நடிக்கின்றீர்களா, அல்லது தானாக வருகின்றதா?**

பதில் : எனக்கு நடிப்பு வராது சேர். ஏன்னா ஒன்னு ரியாலிட்டி ஜெஜ்ஜஸ் நடிக்க மாட்டாங்க. மனசில என்ன ஓடும்னா அதில் டாரக்டர் புறொவ்டிசர் எல்லாமே நான் தான். எனக்கு நல்லா வரனும் என்டு யோசிச்சு நான் அவ்ளோ டென்சனா இருக்கும் பொழுது ஒரு குழந்தை வந்து கஷ்டப்பட்டு உயிரை கொடுத்து ஆடும் பொழுது எவ்ளோ உயிரை கொடுத்து ஆடுறாங்கனு எனக்கு தெரியும் டாரக்டரா. அவங்க னைட் 12 மணி வரைக்கும் ரியல்சல் பன்னிட்டு தூங்காம வந்து காலைல ஆடும் பொழுதும் அந்த கவலையும் இருக்கும், அதாவது டான்ஸ் எனக்கு உயிர். அந்த உயிருக்கு ஒரு உயிர் கொடுக்கும் போதும் என்ன அறியாம எனக்கு கண்ணீர் வரும். இந்த கண்ணீர் என்று சொல்றது ஆர்டிபிசலா வரவே வராது. ஒரு படத்தில நடிக்கிறதுக்காக ஆர்டிபிசலா வருமே தவிர நேட்சுரலா வரவே வராது.

எனக்கு கண்ணீர் சீக்கிரமா வரனும் என்டு நீங்க நினைச்சா என்னுடைய அம்மாவை பற்றி ஒரு வார்த்தை சொல்லுங்கள் நான் அழுவேன். ஆனா இப்ப இங்க இருக்கிற தமிழர்களைப் பற்றி சொல்லுங்க நான் உடனே அழுவேன். ஏன்னா இன்னைக்கு பார்த்த பல விசயங்கள் என் மனச ரொம்ப கவலைப்பட செய்தது. கூடுதலா நான் காலைல வந்ததும் கண்ண மூடி எதையாவது யோசிப்பன் டாரக்சன் எதையாச்சும் ஆனா இன்னைக்கு புல்லா நான் தூங்காம வந்ததுக்கு காரணம் நான் யோசிச்சன். ஏன் இப்படி பன்னினாங்க ஏன் இப்படி இருக்கிறாங்க என்டு இந்த கேள்விகளை நான் பல பேரிடம் கேட்டுக்கிட்டு வந்தன். அப்படியிருக்கும் பொழுது எனக்கு அந்த மாதிரி வராது ஏன்னா நான் நடிகை கிடையாது. நான் ஒரு தொழிலாளி. நான் தொழிலாளியா தான் இருக்கனும்னு ஆசப்படுறேனே தவிர வேற எதுவும் இல்லை.

ஒரு ஸ்டூடன்ட் வராங்க அவங்க வாழ்க்கைல எவ்வளவோ பல கனவுகளோட வந்துகிட்டு இருக்கும் போது நான் போய் ஏய் என்ன பன்ற என்டு நான் இந்த கதிரைல உட்காந்து சொல்லலாம். ஆனா அந்த பொண்ணு வீட்டு சைட்ல இருக்கிறவங்க எல்லாம் என்ன கலா மாஸ்டரிட்ட திட்டு வாங்கிட்டியா என்டு சொல்லும் பொழுது இருக்கிற அந்த பொண்ணோட கொடுமை மட்டமானது. அதனால தான் எப்பவுமே குழந்தைய அடிச்சு வளர்க்க கூடாது. அன்பால வளர்த்தீங்கன்னா அந்த குழந்த நல்லா இருக்கும், அடிச்சு அடிச்சு வளர்த்தா என்ன அம்மா 2 தடவை அடிக்க போறாங்க அவ்வளவு தான் என்டு சுரண போயிடும். அப்படி இருக்க கூடாது அடிக்காம அப்படியே தட்டிக்கொடுத்தீங்கன்னா எந்த வேலையும் செய்யலாம். அதனால தான் நான் இருக்கிற எல்லாரையுமே ஏன் என்கிரேஜ் பன்றேன்னா நல்லா இருக்குன்னு சொல்றோம்னா ஐயோ அக்கா கலா மாஸ்டர் நல்லா இருக்குன்னு சொல்லிடாங்க என்டு நாம இன்னும் நல்லா பன்னலாம் என்டு நினைப்பாங்க. ஆனா நீ நல்லா இல்லன்னு சொல்லும் போது நிறைய பேர் டிப்ரைசன்ல போயிடுவாங்க சி கலா மாஸ்டர் நல்லா இல்லனு சொல்லிட்டாங்க இனி என்ன வாழ்க்க அப்பிடினு போயிடக்கூடாது. ஏன்னா நிறைய பேர் அந்த டிப்ரைசன் பார்ஸ்டா எடுக்கிறாங்க அப்படி எடுக்ககூடாது. அடிபட்டு அடிபட்டு தோல்விபட்டு தோல்விபட்டு தான் வெற்றியடைய முடியும். அதனால என்ன பொறுத்தவரைக்கும் நான் யாரையுமே கேர்ட் பன்னவே மாட்டேன்.

**கேள்வி : உங்களுடைய நடனத்துறையிலே நீங்கள் ஒரு சுவாரஸ்யமான அதாவது எல்லோரும் கூடுதலாக இந்த நடனத்திலே ஈடுபடுகின்ற பொழுது நடனக்காட்சிகளை பார்க்கும் பொழுது கதை கதம்பம் எல்லாம் அதற்குள் சேர்ந்து வருகின்றது எனவே இதுவரையிலே நடந்த ஒரு சுவாரஸ்யத்தைப் பற்றி கூறுங்கள்.**

பதில் : சந்திரமுகி என்று தான் கண்டிப்பா சொல்லுவேன் அதை மறக்கவே முடியாது. சந்திரமுகி கிளைமெக்ஸ் சோங்கை பார்த்தால் தெரியும் ரா ரா பயங்கரமான பேமஸ் சோங். அந்த பாட்டு நிறைய மார்ஸ்டர்ஸ் பன்ன வேண்டிய சூழ்நிலை அது ஒரு வருடம் ஓடின படம். அந்த பாட்டுக்கு நிறைய மாஸ்டர்ஸ்கிட்ட கேட்டுக்கொண்டு இருந்திருப்பாங்க போல எனக்க தெரியாது திடீர்னு, பிரபு சேர் எனக்கு ஒரு அண்ணா மாதிரி, அவர் கோல் பன்னி கலா மாஸ்டர் நீ எங்க இருக்கிற என்டு கேட்டாரு நான் இங்க தான் இருக்கேன் என்றேன். நாளைக்கு டிஸ்கசனுக்கு வந்திரு என்டாரு என்ன எனக்கு புரியல என்றேன். இல்ல நாங்க சந்திரமுகி படம் எடுத்துக்கிட்டு இருக்கிறோம் என்றார் எனக்கு தெரியும் இந்த காரக்டர் சிம்ரன் பன்ன வேண்டியது சிம்ரன் இல்ல ஜோதிகா வந்தா சோ ஜோதிகாக்கு ஒரு கிளாஸிகள் சோங் எடுக்கனும் இது சினிமா வட்டாரத்துக்குள்ள பேசப்பட்டுட்டு இருந்தது. ஓகே நான் வரேன் என்டுட்டு நான் போனேன் வாசு சேர் என்னட்ட ஒரு கான்சப்ட் சொன்னார் கலா இது கிளைமெட் சாங் இந்த பாட்டு இல்லன்னா படமே கிடையாது உங்களுக்கு தெரியும் அந்த பாட்டு தான் ரொம்ப இன்போர்ட்டன்ட். அப்ப இந்த பாட்டு வந்ததும் எனக்கு தெரியாது என் பின்னாடி பேசினவங்க என்ன பரதநாட்டியம் கலா மாஸ்டர் ஜோதிகாக்கு இப்படி கம்போஸ் பன்றாங்க அவளுக்கு டான்ஸே வராதே அப்படி சொல்லி நிறைய பேர் என்னப்பற்றி பாங்ல பேசினாங்க. எப்பவுமே எத சொல்றாங்களோ அத நான் ஒப்பசைட்ல பன்ற காரக்டர் தான் நான். இத பன்ன முடியாது அப்பிடின்னா ஏன் பன்ன முடியாது பன்ன முடியும். என்னோட வாழ்க்கைல எல்லாமே அப்படி தான் மாநாட மயிலாட நிறைய பேர் எப்படி சக்சஸ் பன்ன போறா என்று நிறைய பேர் நினைச்சாங்க அத நான் சக்ஸஸ் பன்னினேன் அப்பிடி இருக்கும் போது நான் ஆடினேன் சில்லுனு ஒரு காதல் முடிச்சிட்டு ஜோதிகா வந்தா. கலா எனக்கா நீ இப்பிடி கம்போஸ் பன்னியிருக்க என்டு கேட்டா. உனக்கு தான் ஜோ என்டன். அப்ப ரியசல் பன்னலாம் என்டா நான் வேணாம் எல்லாம் சூட்டிங்ல பன்னிக்கலாம் என்டன். ஏன்னா ஒரு கிளாஸிகள் ரியசல் பன்னும் போது ரொம்ப கார்புல்லா சொல்லிக்கொடுக்கனும். சொல்லி கொடுக்க கொடுக்க ரியசல் பன்ன பன்ன அந்த முத்திரைகள் போஸ் எல்லாமே அசிங்கமா போயிடும் எனவே சூட்டிங் போய்ட்டு ஒரு சோட் எடுத்தாலும் வன் அவர் டைம் எடுத்து பன்னினேன் அதில நான் கஷ்டப்பட்டதுக்கு ஜோதிகாவுக்கும் ரிசல்ட் கிடைச்சது எனக்கும் ரிசல்ட் கிடைச்சது எனக்கு ஸ்டேட் அவார்ட் கிடைச்சது. அதாவது பரதம் தெரியாத ஒரு பெண்ணுக்கு பரதம் கத்துக்கொடுத்து நீங்க சொன்னீங்களே பரதம் அழியுதுன்னு அந்த பரதத்துக்கு ஸ்டேட் அவார்ட் கிடைச்சது வேறொரு படத்துலையும் பரதத்துக்கு நெஷனல் அவார்ட் கிடைச்சது. எனக்கு இந்த ரெண்டு பெரிய அவர்ட் பரதத்துக்கு தான் கிடைச்சது. சோ நான் சந்திரமுகியை வாழ்க்கைல மறக்க முடியாது.

**கேள்வி : நீங்கள் 40 ஆண்டுகள் தொடர்ந்து வந்த இந்த நடனத்துறையிலே அதாவது இலங்கை மக்கள் அதை அறியக்கூடிய வாய்ப்புக்கள் குறைவாக இருக்கிறது. எனவே நீங்கள் பெற்ற விருதுகள் மற்றும் சந்தித்த சவால்கள் பற்றி கூறுங்கள்?**

பதில் : சவால் வந்து போட்டி தான். எங்களோட சினிமா துறையில ஓடிக்கிட்டே இருக்கனும் கொஞ்ச நேரம் நின்னா கூட யாரும் முந்திக்கொண்டு போயிடுவாங்க ஆனா நான் ஓடிக்கிட்டே இருந்தன், நான் ஒரு லெவல் ஓடினதும் மத்தவங்கள ஓடவச்சன். ஏன்னா அவங்களும் போய் அந்த இமய மலைய தொடனும்னு ஆசப்படுவாங்க. ஆனா நான் என் ஓட்டத்த நிறுத்தல என்னுடைய ஓட்டம் வேற இடத்துக்கு போய்கிட்டு இருந்தது. சின்னத்திரைக்கு போனன் டிபரன்ட் டிபரன்ட் ஜோப்புக்கு பன்னினேன். சினிமாவிலயே நான் பல விசயங்கள் பன்னிக்கிட்டு இருந்தன். டான்ஸ் கிளாசஸ் ஓபன் பன்னினேன் சோஸ் பன்னினேன் ஒரே டான்ஸ் சூட்டிங் மட்டும் பன்னாம இந்த மாதிரி பன்னும் போதும் இது பெரிய ஒரு அச்சீமென்டாத்தான் நான் நினைக்கிறேன். ஏன்னா யாருக்கு கிடைக்குதோ இல்லையோ எனக்கு கிடைச்ச அவர்ட் நெஷனல் அவர்ட், ஸ்டேட் அவர்ட், பிலிம்பேர் அவர்ட் அன்ட் பிலிம் பெஸ்டிவல் இதுவரைக்கும் யாருமே பன்னாத ஒரு சோ நா பன்னியிருக்கேன். யப்பான் 2000 அதுக்கு நான் தான் வன் மந்த் ஒரு பெரிய டான்ஸ் ராமா பன்னினேன். அப்பறம் மிஸ் வேர்ல்ட் 1996 அது இந்திய டான்ஸ் மாஸ்டருக்கு கிடைச்சிருக்கு என்டா அது எனக்கு கிடைச்ச பெரிய ஓபர்யுனிட்டி அதுவொரு பெரிய விசயம் எனக்கு மட்டும் கிடைச்ச விசயம். இப்ப ரீசன்டா மாநாட மயிலாட சீசன் 10 இல ஒரு அச்சீவ் பன்னனும்னு நான் ஆசப்பட்டன் கிண்ணஸ்ல போய் டச் பன்னன். எனவே எனக்கு கிண்ணஸீம் கிடைச்சது. ஆவர்ட்ட நோக்கி நா போகல செய்றத வித விதமா செய்யனும் அதில நல்லது நடக்கும் அப்பிடி நான் பன்னுவேனே தவிர அவர்ட நோக்கி நாம பன்னினா நமக்கு பிக்சஸ் கிடைக்காது. உங்களோட தொழிலை நோக்கி பன்னினா அவர்ட் நம்மல தேடி வரும் அவ்வளது தான்.

**கேள்வி : கூடுதலாக ஹிந்தி படங்களை பொருத்தவரையிலே அதனுடைய நடனங்கள் எல்லாமே சற்று வித்தியாசமான முறையிலே பாடல்களுடைய காட்சிகள் அதற்கு இன்னும் கவர்ச்சி கொடுக்கக்கூடிய உலகலாவிய ரீதியிலே சந்தைப்படுத்தலுக்கு முகம் கொடுக்கும் நிலையிலே இந்தியாவில் இருக்கும் இரண்டு படங்களுக்குள் இதனை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : இந்தியாவில டாப் என்றால் அது ஹிந்தி தான். அதாவது பட்ஜட்ல இருந்து புரடக்சன்ல இருந்து ஹிந்தி வேல்ட் லெவல்ல ரிலீஸ் ஆகும் அப்பிடி இருக்கு. அதே மாதிரி இப்ப தமிழ் இருந்தாலும் தமிழர்கள் மட்டும் தான் பார்ப்பாங்க. ஆனா ஹிந்திய தமிழர்கள் மலையாளிகள் தெலுங்குகாரங்க பார்ப்பாங்க இப்படி எல்லாருமே ஹிந்திய பாக்கிறது பெரிய விடயம். என்னன்னா நம்மளுடைய டான்ஸ் ஸ்டைல் வந்து அது நம்ம டெடிசனல் டான்ஸ் ஸ்டைல் அவங்களோட ஸ்டைல பாத்தீங்கன்னா அதுவும் டெடிசனல் டான்ஸ் கதக்ல இருந்து வந்தது.

11ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

10ஆம் பக்க தொடர்ச்சி...

ராஜஸ்தான் இந்தியன் போக் டான்ஸ். வராத்தி போக் டான்ஸ்ல வந்த ஒரு பஞ்சாபி டான்ஸ் இது எல்லாமே சேர்ந்தது அவங்களோட ஸ்டைல் அது. நீங்க நோர்த் இந்தியன் டான்ஸ் பார்த்தீங்கன்ன நிறைய அதுல வாங்கடா இருக்கும் ராஜஸ்தானிய டான்ஸ் இருக்கும் கதக் இருக்கும் எங்க ஸ்டைல பாத்தீங்கன்னா வேற மாதிரி இருக்கும். நம்ம இந்தியன் போர்க் நம்ம டெடிசனல் என்னவோ அதுதான் இருக்கும். நம்மளுடைய டான்ஸ தான் ஹிந்தி காப்பி பன்றாங்களே தவிர நாம ஹிந்திய காப்பி பன்னல அத மட்டும் புரிஞ்சு கொள்ளுங்க.

எங்களுடைய தமிழ் சினிமாஸ்ல இருக்கிற டெக்னீசன்ஸ் தான் ஹிந்தி படத்தை நிறைய பன்றாங்க. ஒரு காமெரா மான எடுத்தீங்கன்னா நம்மலுடைய தமிழ் நாட்டுல இருக்கிற 10 காமெரா ஹிந்தி படத்தை பன்றாங்க ஆனா ஹிந்தில இருக்கிற ஒரு காமெரால வந்து எப்பவாவது ஒரு படத்தை தான் பன்றாங்களே தவிர வேற படம் பன்னமாட்டாங்க. அதே மாதிரி நம்மளோட டாரக்டர்ஸ் ஹிந்தி படத்தை நிறைய டாரக்ட் பன்றாங்க சங்கர் சேர்ல இருந்து முருகதாஸ் சேர் வரை. ஆனா நீங்க யோசிச்சு பாருங்க ஒன்னு சொல்ல முடியுமா ஹிந்தி டாரக்டர் ஒரு தமிழ் படத்தை டாரக்ட் பன்னினாரு என்டு. இல்ல. சோ நோட் தமிழ் ஒன்லி நம்ம சவுத் இந்தியன்ல இருக்கிற டெக்னீசன்ஸ் எக்ஸ்டோனரி டெக்னீசன்ஸ். PC சிறிராம் சேர் இப்ப ஹிந்தி படங்கள் பன்னிக்கிட்டு இருக்காரு. எத்தனையோ படம் திரு பன்னிக்கிட்டு இருக்காரு ஏகாம்பரம் பன்னிக்கிட்டு இருக்காரு நிறைய பேர் ஹிந்தி படம் பன்னிக்கிட்டு இருக்காங்க ஆனா அங்க இருந்து யாரும் இங்க வரமாட்டாங்க இங்க இருந்து தான் எல்லாரும் அங்க போறாங்க சோ நம்மகிட்டதான் நிறைய டெக்னீசன்ஸ் இருக்காங்க.

**கேள்வி : தற்பொழுது நீங்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றீங்கள் இலங்கையிலே நடனக்கலைஞர்களை இணைத்து இந்தியா திரைப்படங்களிலும் ஏனைய உங்களது நிகழ்ச்சிகளிலும் அவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்வீர்களா?**

பதில் : என்னால முடிந்த விடயம். எனக்கு கரக்டான ஏபர்யுனிட்டி கொடுத்தா 100 வீதம் நான் பன்னுவன்.

**கேள்வி : இறுதியாக அது என்னுடைய கேள்வி நீங்கள் அடிக்கடி ஒரு நிகழ்ச்சியிலே நடனம் நன்றாக இருந்தால் நீங்கள் உங்களுக்கான அதாவது படையப்பா பாணியிலே கிழி கிழி என்று சொல்லுவீர்கள் அது உங்களுடைய பாணிதானா அல்லது?**

பதில் : அட்சுவலி பாணி என்றது இல்லை கிழி கிழி என்று சொல்வது சினிமா காரங்களுடைய ஒரு டயலொக். ஆனா சும்மா கிழி என்று சொன்னது நான். டான்ஸ் ஆர்ட்டீஸ் ஆடினாங்கன்னா ஆர்ட்டிஸ் ஆடி முடிந்ததும் எங்கள பாப்பாங்க சேர் சூப்பரா இருக்கு என்று சொல்லுவோம். அப்ப ரஜினி சேர் என்ன ரொம்ப கிழியா என்டு சும்மா ஸ்டைல் வரும். சும்மா கிழிச்சிட்டீங்க சேர் என்றது ஒரு நோர்மலா சொல்ற டயலொக் தான் வேற ஒன்டுமே இல்லை. இப்ப நாங்க ஆ அசத்திட்ட. பின்னிட்ட அதுகல்ல வந்தது தான் இந்த கிழியும். அப்பிடி இருக்கும் பொழுது என்னுடைய பசங்க வெறும் கிழி என்று சொல்றத விட சும்மா கிழிச்சிட்ட என்டு சொல்லும் பொழுது வேற லெவல் டான்ஸ் என்று சொல்லுறதுடைய ஈக்குவல். சோ அதோட நான் சும்மா கிழி என்றத சேர்த்துக்கிட்டேன். ஏர்ப்போர்ட்ல மெடம் நீங்க சும்மா கிழி என்று சொல்லுங்கலன். நான் இங்க போய் எப்பிடி சும்மா கிழி என்று சொல்றது நீ ஆடு நான் அப்ப சொல்றன் என்டுவேன். சோ எந்த இடத்துல சொல்லனும் என்டுகூட தெரியாம அவங்க இந்த இடத்துல சொல்லு என்டுவாங்க. அது காஸ்வலா வந்த டயலொக் வட் இவ்ளோ ரீச் ஆகும்னு நான் எதிர்பாக்கல.

04ஆம் பக்க தொடர்ச்சி...

நான் கிட்டடியில் ஒட்டமாவடிக்கு போய் மௌத்தானில் நிறைய பேர் மரணத்தில் கலந்துகொள்ளவும் இடமில்லை. இரண்டு பேர் தான் போகலாம் மையத்தோடு எனவே நான் மௌத்தான சிலபேர் போர் குடும்பதோடு சில தெரிந்த ஆட்களும் வந்தார்கள் எல்லாரும் போனோம் நாங்கள் ஒரு கூட்டாக போனால் அங்கு இராணுவத்தினர் ஆ சேர் வித்தரக் என்ட என்றார்கள் அப்பொழுது எங்களது போட்டோ எடுக்கின்ற ஆள் பின்னாலே கமெராவ தூக்கிக்கொண்டு வந்தார்.

மையத்திற்கு முன்னாலே போட்டோ எடுக்க ஏலாது என்று சொல்லுகின்றார் இது எங்காவது படிச்சிட்டு வந்த ஆளோ என்டும் நான் யோசிச்சன். சில நேரம் போட்டோ எடுப்பது சில ஆட்களுக்கு விரும்பமில்லை. பார்த்தால் அவ்வளவு தூரத்திற்கு பாதுகாப்பு யைத்திற்கு பின்னுக்கு.

இப்ப அங்க ஒருத்தரும் இல்லை இப்படியான ஒரு நாடகத்தை நடித்து முழுக்க முழுக்க ஒரு கேளிக்கூத்தாக இந்த விடயத்தை மாற்றி இந்த அநியாகத்தை செய்த இந்த ஆட்சியாளர்கள் இவர்களுக்கு கூஜா தூக்குகின்ற யாரும் இருந்தால் இனி அடுத்த தேர்தலில் வந்து இவர்கள் எப்படி ஒட்டுக்கேட்பது.

இது தான் எனக்கு உள்ள பிரச்சனை. இதை கட்சியின் பெயரில் எப்படி கேட்பது என்ற பிரச்சனை இதைத்தான் நான் அவர்களுக்கு சொல்லுகின்றேன். இப்ப செரீபா மன்னிப்பு கேட்டாச்சு நலின் மன்னிப்பு கேட்டாச்சு இனி எத்தனை பேர் இருக்கின்றார்கள் மன்னிப்பு கேட்க செரீபா மன்னிப்பு கேட்டது சரி அது மன்னித்தாரோ தெரியவில்லை வேறு ஏதோ கேட்டார் என்றார் அது சரி அவரை நாங்கள் பார்த்துக்கொள்ளுவோம். ஆனால் பிரச்சனை என்னவென்றால் இப்ப இதைவிட பெரிய ஆட்கள் வந்து மன்னிப்பு கேட்கும் நிலை வரப்போகின்றது.

இது தான் எனக்கு உள்ள வருத்தம். இப்பொழுது கல்முனையில் இருக்கும் சிலர் கை தட்டுகின்றார்கள் போய் சொல்லுங்கள். எனவே இதுதான் விடயம். மீதி சந்தோஷம் என்னவென்றால் இந்த சம்மாந்துறை எஸ்எல்எஸ் எஸ்.டி.ஆர் அமைப்பின் இந்த இயக்கம் 5 வருட பூர்த்தியை கொண்டாடும் சந்தோஷத்தில் புத்தளத்தில் இருந்து வந்திருக்கின்றார்கள்.

மூதூரில் இருந்து வந்திருக்கின்றார்கள் வாழைச்சேனை ஒட்டமாவடியில் இருந்து வந்திருக்கின்றார்கள் ஏறாவூரில் இருந்து வந்திருக்கின்றார்கள் எல்லா இடத்திலிருந்தும் சாரி சாரியாக ஒத்த ஒத்தையாக நிறைய பேர் வருகின்றார்கள்.

ஏன் என்றால் இந்த புதினத்தை பார்க்க இங்கு எம்பிமார் ஒரு பக்கம் தலைவர் ஒரு பக்கம் கட்சி எல்லாம் நாசமா போயிவிட்டது என்று நினைக்கின்ற நேரத்தில் இவர்கள் என்னடாப்பா 5 வருடத்தை கொண்டாடுகின்றார்கள் என்று பார்ப்பதற்கு புதினம் கொண்டாடுவதற்கா எல்லாரும் வந்திருக்கின்றார்கள். இல்லை இவர்கள் எல்லோரும் மிக ஆழமாக இந்த இயக்கம் வாழ வேண்டும் என்ற உணர்வில் இருப்பவர்கள் இந்த உணர்வு இருக்கும் வரை இந்த இயக்கம் வாழும் இந்த உணர்வோடு இளைஞர்களும் கட்சியின் போராளிகளும் இருக்கும் வரை இந்த தலைவிக்கும் தயக்கம் கிடையாது. பயமில்லாமல் பீதி இ.ல்லாமல் எதையும் எதிர்கொள்ளலாம்.

எனவே தான் அந்த முடிவோடு மிகத் தெளிவாக இந்த இயக்கத்தை வாழ வைப்பதற்கு இன்று சம்மாந்துறையிலே இளைஞர்கள் புறப்பட்டிருக்கின்ற மாதிரி ஒவ்வொரு ஊரிலும் இளைஞர்கள் புறப்பட வேண்டும். ஒரு யுகமாற்றம் நிகழ வேண்டும் அதற்கான தருணம் வந்துவிட்டது.

மெதுவாக இதுவொரு நிலைமாறு காலம் இந்த நிலைமாறு காலத்தில் இந்த இயக்கம் இன்னும் புடம் போடப்பட்டு வீரியத்துடன் முன்னேறி பயணிக்க வேண்டும் அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பான் என்ற பிரார்த்தனையோடு உங்கள் மத்தியில் இருந்து பணிவோடு விடைபெற்றுக்கொள்கின்றேன்.

13ஆம் பக்க தொடர்ச்சி...

எனவே ரஷ்யா - உக்ரைன் பிரச்சனையானது உலக நாடுகளுக்கு இன்னுமொரு நெருக்கடியை தோற்றுவிப்பதாக அமையப்பெற்றுள்ளது. கொரோனாவுக்கு பின்னான காலக்கட்டத்தில் இலங்கையில் இன்று பேசப்படுகின்ற ஒரு முக்கிய விடயமாக பொருளாதாரம் காணப்படுகின்றது. ஆனாலும் கொரோனா வைரஸ் தாக்கம் தோற்றுவித்திருக்கும் நிலைமை காரணமாக இந்நாட்டில் மாத்திரமல்லாமல் பிராந்தியத்திலும், உலகளாவிய ரீதியிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருப்பதோடு புதிய பொருளாதார ஒழுங்கு தோற்றம் பெறக்கூடிய நிலமை நோக்கி நகரவேண்டிய தேவை இருக்கின்றது. அதனால் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்து கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்கு வரும் என்றுகூற முடியாத நிலைமையில் கொரொனாவுடன் இணைந்து வாழ வேண்டிய நிலைமைக்கு இந்த காலக்கட்டம் மாறியுள்ளது.

ஆகவே குடும்பத்தினதும், நாட்டினதும் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவர் முன்பாகவும் உள்ளது. இதன் நிமித்தம் தமக்கு தேவையான உணவுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய வீட்டுத் தோட்டம் அல்லது வீட்டு செய்கையை குறித்து கவனம் செலுத்துவது பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும்.

06ஆம் பக்க தொடர்ச்சி...

கட்சிகளுக்குள் ஒவ்வொரு கொள்கைகளை வைத்துக்கொண்டு நாட்டின் அரசியலைத் தீர்மானித்து சுயநலப்போக்கில் நடைமுறைப்படுத்துகின்றபோது தான் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றது.

புதிய அரசியலமைச் சட்டம் குறித்து கடந்த சில வருடங்களாகப் பேசப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தப்படும் எனக் கூறப்படுகிறது. ஆனால் இவையனைத்தும் தமது தேவைக்கேற்ப யாரைத் திருப்திப்படுத்துவற்காக திடீரென தென்னிலங்கை அரசியலில் பேசப்படுகின்றது என்பது தொடர்பில் சிறுபான்மை மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். பெரும்பான்மையைக் கையில் வைத்துக்கொண்டு உடனடியாகச் செய்ய வேண்டிய விடயங்களை, சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய விடயங்களைச் செய்ய இந்த தென்னிலங்கையின் அரசியல் தயாராக இல்லை. தென்னிலங்கையின் அரசியல் அனைத்து சமூகங்களையும் இணைத்துக்கொண்டு ஜனநாயக ரீதியாக செயற்படுத்தப்படவேண்டும். இன்று தமிழர்களின் அரசியல் உரிமைப்போராட்டங்களின் வாயிலாகத் தொடர்கின்றது. முஸ்லீம்களின் அரசியல் பிரச்சினைகளுடன் பயணிக்கிறது. தென்னிலங்கையின் அரசியலானது இவ்விரு சமூகங்களின் அரசியலில் குளிர்காய்கிறது. தென்னிலங்கை அரசியலின் குளறுபடியினால் தான் ஏனைய சிறுபான்மைச் சமூகங்கள் இவர்களுடன் இணைந்து பயணிக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. இவற்றைக் கருத்திற்கொண்டு இனிமேலாவது தென்னிலங்கையின் அரசியலில் திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும் நிலை ஏற்படுமா?

# வாழ்க்கை தத்துவங்கள்

எத்தனை துன்பங்கள் பகைவர்களால்வந்தாலும், அதை அன்பாலேயே வென்றுவிடுங்கள். - காந்திஜி.

துன்பங்களுக்கு இடையில் தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன. -ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

அன்புதான் உன் பலவீனம் என்றால்,இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலிநீதான். - அன்னை தெரசா.

விட்டுக்கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும். மன்னிப்பு கொடுங்கள் தவறுகள் குறையும். மனம் விட்டுபேசுங்கள் அன்பு அதிகமாகும். -அன்னை தெரசா.

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன். - ஆபிரகாம் லிங்கன்.

உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன்செயல்கள் இருக்கும். உன் செயல்ளுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும். - சாக்ரடீஸ்.

மனநிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம், ஆடம்பரம் என்பது நாம் தேடிக்கொள்ளும் வறுமை. - சாக்ரடீஸ்.

கண்ணாடி தான் என் சிறந்த நண்பர்.ஏனெனில், நான் அழும் போது அது ஒரு போதும் சிரித்ததில்லை. - சார்லிசாப்ளின்.

உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர்மனம் வலிக்கும்போது சிரிக்க வை. -சார்லி சாப்ளின்.

நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது. நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது. நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது. - கன்ஃபூஷியஸ்.

நமக்கு நெருக்கமானோர் நம்முடன் பேசாத போது ஏற்படும் வலியை விட.அவர்கள் மற்றவருடன் நெருக்கமாக பேசும் போது ஏற்புடும் வலி அதிகம்.

கஷ்டப்படுறவன் கிட்ட சிரிப்பு இருக்காது.சிரிக்கிறவன் கிட்ட கஷ்டம் இருக்காது.ஆனால் கஷ்டத்திலும் சிரிக்கிறவன் கிட்ட தோல்வி இருக்காது.

சந்தோசத்த தான் நம்ம சுத்தி இருக்குறஎல்லாருகிட்டயும் பகிர்ந்துக்கனும்.கஷ்டம்னு வந்தா தனியா நின்னுஜெயிக்கிறவன் தான் மனுஷன்.

வாழ்க்கையில் ரெண்டு விஷயத்தஎப்பவும் மறக்கக் கூடாது. விரும்பி எதுவந்தாலும் “TAKE CARE”, விலகி எதுபோனாலும் “DON’T CARE”.

இன்பத்தை “INBOX” இல் வை.கவலையை “OUTBOX” இல் வை.புன்னகையை “SENT” பண்ணு.கோபத்தை “DELETE” பண்ணு. மனதை“VIBRATE” செய்து பார். வாழ்க்கை தானா“RINGTONE” ஆக மாறும்.



# பல்சுவை கதம்பம்



## எண்ணற்ற ஆரோக்கிய நலன்களை அள்ளித்தரும் பப்பாளி !!

பப்பாளியில் ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளன. சரும பிரச்சனைகள் இருந்து சிறுநீரக கற்களை போக்கும் வரை இதன் பயன்கள் ஏராளம்.

விட்டமின் ஏ முதல் ஏராளமான ஊட்டச்சத்துகளைக் கொண்டுள்ளப் பப்பாளி, பாக்டீரியா மற்றும் பூஞ்சை எதிர்ப்புத் திறன் கொண்டது.


பப்பாளியில் நார்ச்சத்து, விட்டமின் ஊ மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்கள் நிறைய உள்ளன. அவை தமனிகளில் கொழுப்பை தடுக்கிறது. அதிகப்படியான கொழுப்பு தமனிகளில் உருவாவதை தடுக்கிறது. இதனால் மாரடைப்பு ஏற்படும்.

நீரிழிவு பிரச்சனையை கட்டுக்குள் வைப்பதில் பப்பாளி பழம் சிறப்பாக செயல்படுகிறது. இது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைப்பதோடு, நம் உடல் சோர்வையும் குறைக்கிறது.

பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிகபடியான ரத்த போக்கை கட்டுப்படுத்தும். இந்த மாதவிடாய் நேரத்தின் போது உடலில் சிக்கல்கள் ஏற்பட்டால் அதற்கு பப்பாளி சிறந்த தீர்வை அளிக்கிறது.

பப்பாளியில் விட்டமின் C, விட்டமின் E மற்றும் பீட்டா கரோட்டின் போன்ற ஆன்டி-ஆக்ஸிடன்கள் நிறைந்துள்ளன. இது உங்கள் சருமத்தை சுருக்கங்கள் மற்றும் வயதான அறிகுறிகளில் இருந்து காக்க உதவுகிறது.





## அன்றாடம் இளநீர் குடிப்பதால் என்ன நன்மைகள் தெரியுமா...?

இளநீரில் ஆன்டி-பாக்டீரியல் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி அடங்கியிருப்பதால் வைரஸ் கிருமிகள் தாக்குதலில் இருந்து நம் உடலை பாதுகாக்கிறது. இளநீரில் குறைந்த அளவே கொழுப்பு இருப்பதால் மற்றும் இளநீரை பருகும்போது வயிறும் நிறைந்து போவதால், தேவையற்ற உணவுகளை சாப்பிட முடியாமல் உடல் எடை குறைய உதவுகிறது.

இளநீரில் சர்க்கரை நோயாளிகளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் இருப்பதாலும், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டில் வைக்க உதவுவதாலும், நீரிழவு நோய் உள்ளவர்கள் இளநீர் பருகுவது மிகவும் நல்லது.

இளநீரில் அதிக அளவு பொட்டாசியம் இருப்பதால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் வாதம் சம்பந்தமான நோய்களுக்கும் நல்ல மருந்தாக அமைகிறது. பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற கனிமங்கள் இளநீரில் அதிகம் இருப்பதால் சிறுநீரகத்தில் கற்கள் உருவாவதை தடுக்கும்.

முகத்தில் ஏற்படும் பருக்கள், புள்ளிகள், சுருக்கங்கள் மற்றும் படை போன்ற இடங்களில் இளநீரை இரவில் படுக்கும் போது தடவிவிட்டு காலையில் கழுவ வேண்டும். இதனை தொடர்ச்சியாக மூன்று வாரங்கள் செய்தால் சரும பிரச்சனைகள் சரியாகும்.

## பாதாமை தினமும் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் !!

பாதாமை தினமும் சாப்பிட்டு வந்தால் புரதச்சத்து, நார்ச்சத்து, விட்டமின்கள், தாதுக்கள், ஆன்டி-ஆக்சிடென்டுகள் முற்றும் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் போன்ற ஊட்டச்சத்துக்களை பெறலாம்.

பாதாமை சாப்பிட்டு வருவதன் மூலம் சுவாசக் கோளாறு, இதய நோய், நீரிழிவு நோய், சருமப் பிரச்சினை, முடி உதிர்வு, ரத்த சோகை போன்ற நோய்களைத் தடுக்கலாம்.

தினமும் இரவில் தூங்கச் செல்வதற்கு முன்பு, முகத்தில் பாதாம் எண்ணெய் தடவி மென்மையாக மசாஜ் செய்து வந்தால் பொலிவு அதிகரிக்கும். மாதவிடாய் நின்ற பெண்கள், தினமும் பாதாம் பருப்பை சாப்பிட்டுவந்தால், சருமத்தில் ஏற்படும் சுருக்கங்களை போக்க முடியும்.

தினமும் 6-7 ஊறவைத்த பாதாம் பருப்புகளை சாப்பிடுவதன் மூலம் மலச்சிக்கலில் இருந்து விடுபடலாம். உடல் எடையைக் குறைப்பதற்கு முயற்சிப்பவர்கள், தினமும் 5 பாதாம் பருப்புகளை சாப்பிட்டு வந்தால் ரத்தத்தில் கலந்துள்ள கெட்ட கொழுப்பு கரையும்.

இரத்தத்தில் வெள்ளை மற்றும் சிவப்பு அணுக்களை பெருக்கும் சக்தி கொண்டது, பாதாம். இதில் எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான கல்சியம் மற்றும் பாஸ்பரஸ் உள்ளன.



## கோடைக்காலத்தில் சருமத்தை பராமரிப்பதற்கான சில எளிய டிப்ஸ் !!

வெயில் காலத்தில் சருமத்தில் நீர்த்தன்மை இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கோடைகாலத்தில் அதிக நீரை பருகுவது மிகவும் முக்கியமானது ஒன்றாகும்.

வெயிலில் செல்வதால் அலர்ஜி, உடலில் தடிப்புகள், பருக்கள்,வியர்க்குரு போன்றவை ஏற்படும். இயற்கையாக இதனை சரிசெய்ய பல பொருள்கள்,வழிகள் இருக்கின்றன. இயற்கை பொருட்களான தேன் மற்றும் தயிர் இரண்டும்.வெயிலிலிருந்து சருமத்தைப் பாதுகாக்க பெரிதும் உதவுகிறது. அதேபோல் பாலாடையில் சிறிதளவு மஞ்சள் சேர்த்து முகத்திற்கு பூசி வந்தால் முகம் பளபளப்பை பெரும். ஒரு ஸ்பூன் தயிர், அரை ஸ்பூன் தேன் இரண்டையும் நன்றாகக் கலந்து முகத்தில் தடவவும். ஒரு 10 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான அல்லது குளிர்ந்த நீரால் கழுவவும்.

தேன் மற்றும் தயிர் இரண்டும் சருமத்தில் உள்ள ஈரப்பதத்தைத் தக்க வைக்கிறது. இதனைச் செய்யும் போது உங்கள் வறண்ட சருமம் பளிச்சென்று ஆகிவிடும். மேலும் முகத்தில் உள்ள கரும்புள்ளிகளையும், அழுக்குகளையும் மற்றும் இறந்த செல்களை நீக்கி பொலிவு பெறச் செய்கிறது.

முகத்தில் சுருக்கங்களை நீக்குவதால் இளமையைத் தக்கவைக்கும். இந்த கலவையை கழுத்து, கை உள்ளிட்ட இடங்களில் பருக்கள், கட்டிகள் இருக்கும் இடத்தில் தடவி வந்தால் நல்ல மாற்றத்தைக் காணலாம். வெயில் காலத்தில் சருமத்தில் நீர்த்தன்மை இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கோடைகாலத்தில் அதிக நீரை பருகுவது மிகவும் முக்கியமானது ஒன்றாகும்.



## ஊறவைத்த வெந்தயத்தை தினமும் வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் !!



வெந்தயத்தில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. வெந்தயத்தில் கல்சியம், இரும்பு, பாஸ்பரஸ், அழற்சி எதிர்ப்பு மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட் போன்ற பல கூறுகள் காணப்படுகின்றன. வெந்தயத்தை இரவில் ஊறவைத்து, காலையில் அதன் தண்ணீரை வடிகட்டி வெறும் வயிற்றில் சாப்பிட்டால், அது ஆரோக்கியத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்

வெந்தயக் கீரையை, அப்படியே சமைத்தும் சாப்பிடலாம். அதேபோல, வெந்தயத்தை ஊறவைத்து சாப்பிடுவதால் பல நன்மைகள் கிடைக்கும். வெந்தயத்தை தினசரி சாப்பிட்டு வந்தால் பல நோய்களையும் தடுக்க முடியும். வெந்தயத்தை சமைத்தும், விதையாகவும் சாப்பிடலாம்.

நீரிழிவு நோயாளிகள் ஊறவைத்த வெந்தயத்தை தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால், இரத்த சர்க்கரை அளவு கட்டுக்குள் இருக்கும்.

வெந்தயம் உங்கள் எலும்பு ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும். இதில் நிறைய கல்சியம் உள்ளது. இது எலும்புகளை பலப்படுத்துகிறது மற்றும் தேவையற்ற மூட்டு வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

உடல் பருமன் தான் பல நோய்களுக்கு அடிப்படை. உடல் எடை அதிகரிப்பை தடுக்க நினைப்பவர்களுக்கு வெந்தயம் அருமருந்து.

வெந்தயத்தை தண்ணீரில் ஊறவைத்து, காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது உங்கள் கொலஸ்ட்ரால் அளவைக் கணிசமாகக் குறைக்கிறது.



# கொரோனா வைரசின் இன்றைய நிலையும் இலங்கை எதிர் நோக்கும் சவால்களும்

சீனாவின், ஊபேய் மாகாணத்தின் தலைநகர் ஊகானில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு வசிக்கும் சிலருக்கு, காரணம் தெரியாத நுரையீரல் அழற்சி ஏற்பட்டது. அப்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பு மருந்துகள், சிகிச்சைகள் யாவும் பயனளிக்கவில்லை. இவ்வகை வைரஸ் மக்களிடையே பரவியது. அத்துடன் அதன் பரவுதல் வீதம் (நோய்த்தொற்றின் வீதம்) 2020 ஜனவரி நடுப்பகுதியில் அதிகரிப்பதாகத் தோன்றியது. ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் ஆசிய-பசிபிக் பகுதிகளில் பல நாடுகள் இத்தொற்றுகளைப் பதிவு செய்தன. இத்தொற்றின் அறிகுறிகள் தோன்றுவதற்கு 2 முதல் 14 நாட்கள் வரை ஆகலாம். மேலும் இந்த நோயின் அறிகுறியில்லாதவர்களும் நோய்ப்பரவலுக்குக் காரணமாக இருக்கலாம் என்பதற்கான தற்காலிகச் சான்றுகளும் அறிவிக்கப்பட்டன. இந்த வைரஸுக்கான அறிகுறிகள் காய்ச்சல், இருமல், தொண்டை வறட்சி, மூச்சுத் திணறல் போன்றவையும், மேலும் இறப்புகளும் ஏற்படலாம். என்பதோடு தற்பொழுது எவ்விதமான அறிகுறிகளும் இல்லாமலும் மரணங்களும் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

2020 ஜனவரி 30 அன்று, இத்தொற்றுப் பரவலை ஒரு பொது சுகாதாரப் பன்னாட்டு அவசரநிலையாக (PHEIC) என உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்தது. இது 2009 ஆம் ஆண்டில் H1N1 தொற்றுநோய்க்குப் பின்னர் அறிவிக்கப்படுவது ஆறாவது முறையாகும். 2020 மார்ச் 12 அன்று, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று என உலக சுகாதார நிறுவனம் அறிவித்து. உலக சுகாதார அமைப்பு (WHO) கொரோனாவைரசு எதிராக அவசர மற்றும் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நாடுகளுக்கும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டணியோ குட்டரெஸ் அறிவுறுத்தியிருந்தார்.

இவ்வாறாக இக் கொரோனா வைரசானது 2020ஆம் அதன் தோற்றத்தை கொண்டதாக அமையப்பெற்றாலும். பிற்பட்ட காலங்களில் அவ் வைரஸானது பல திரிபுகளைக்கொண்டதாக மாற்றமடைந்து தற்காலம் வரை அதன் திரிபுகளை பார்க்ககூடியதாக இருக்கின்றது. அவையாவன டெல்டா(Delta), அல்பா(Alpha), பெடா(Beta) மற்றும் கமா( Gamma), லம்டா (Lambda), ஒமிக்ரோன் போன்ற பல திரிபுகளை கொண்ட வைரசாகாக உலகெங்கும் பரவி உலகளாவிய ரீதியில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியது என்றே கூறமுடியும். இன்று வரை இவ் வைரசின் பாதிப்பினால் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை ஒவ்வொரு நாடுகளும் சந்தித்துக்கொண்டு இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

இதன்படி இவ்வைரஸ் மனிதனின் ஆரோக்கியத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளதோடு பொருளாதாரத்துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது என்பது தெளிவாகின்றது. உற்பத்திதுறைகள் உள்ளிட்ட பொருளாதாரத் துறைகள் அனைத்தும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. இவ்வைரஸின் கோரத்தாண்டவம் தொடர்ந்த வண்ணமிருப்பதால் உற்பத்தி துறை உள்ளிட்ட முழு பொருளாதாரத் துறையுமே முடங்கியுள்ளதோடு எதிர்காலத்தில் பஞ்சம் , வறுமை தலைதூக்குமோ என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கின்றது.

அதன் வெளிப்பாடாக தற்போதைய காலக்கட்டத்தில் இலங்கை அரசு உணவு பொருட்கள், பெட்ரோல், தங்கம் என அனைத்து பொருட்களின் விலையையும் கணிசமாக உயர்த்தி உள்ளது. எரிபொருள் பற்றாக்குறையால் நாட்டிற்குள் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. தினசரி ஒரு மணிநேர மின்வெட்டும் ஏற்படுத்தபடுகிறது. வெளிநாட்டிலிருந்து வரும் இறக்குமதி பொருட்களுக்கான பணத்தை செலுத்த முடியாத சூழல் உள்ளது. இதனால் இலங்கை மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கை அரசின் செயலை கண்டித்து கொழும்புவில் உள்ள அதிபரின் அலுவலத்திற்கு முன் எதிர் கட்சியின் தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விலைவாசியை உயர்த்திய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷே பதவி விலக வேண்டும் என போராட்டகாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதாகவும், அந்நியச் செலாவணி நெருக்கடியை உருவாக்குவதாகவும், எரிபொருள், சமையல் எரிவாயு, பால் மா மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசா கலந்து கொண்டு தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில், பொருளாதார சிக்கலைச் சந்தித்து வரும் இலங்கைக்கு அத்தியாவசிய பொருட்களின் தேவைக்காக 7,500 கோடி ரூபாய் கடனுதவி அளித்துள்ளது இந்திய அரசு.

கொரோனாவின் அச்சம் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் உலக நாடுகளில் இடம்பெறுக்கின்ற யுத்தங்களும் இலங்கை பொருளாதாரத்தில் தாக்கத்தினை செலுத்துகின்றது. அந்த வகையில் உக்ரைன் - ரஷ்யா இடையிலான யுத்த மோதல்கள் இலங்கைக்கு குறுகிய மற்றும் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும் என சர்வதேச உறவுகள் சம்பந்தமான வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

## எரிபொருள்

இலங்கை தற்போது அந்நிய செலாவணி மற்றும் எரிசக்தி நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது என்பது இரகசியமான விடயமல்ல. இந்த யுத்த மோதல்கள் காரணமாக இலங்கை எதிர்நோக்கியுள்ள அந்நிய செலாவணி நெருக்கடி. அதேபோல் எரிசக்தி நெருக்கடிக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹசித் கந்த உடஹேவா தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் எரிசக்தி பிரச்சினை ஏற்பட்டுள்ளது. உலக சந்தையில் கச்சாய் எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 டொலர்கள். இந்த இன்னும் சில நாட்களில் 120 டொலர்களாக அதிகரிக்கும். வரலாற்றில் அதிக்கூடிய விலை வரை கச்சாய் எண்ணெயின் விலை அதிகரிக்கலாம். இதனால், இலங்கை பெருந்தொகையான அந்நிய செலாவணியை செலவு செய்து எரிபொருளை கொள்வனவு செய்ய நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய தேவையான அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாத காரணத்தினால், எரிபொருளை கொள்வனவு செய்ய இந்தியாவிடம் ஏற்கனவே 400 மில்லியன் டொலர் கடனை இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது. இதனை பயன்படுத்தி ஒன்றரை மாதத்திற்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய எதிர்பார்த்திருந்தாலும் தற்போது உலக சந்தையில் கச்சாய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதால், எதிர்பார்த்த அளவு எண்ணெயை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நிலவும் நிலைமையில், தேசிய சந்தையில் தற்போதைய விலைகளை விட எரிபொருளின் விலைகளை பெருமளவில் அதிகரிக்க நேரிடும் என உடஹேவா குறிப்பிட்டுள்ளார். இது இலங்கையின் முழு பொருளாதார கட்டமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். இலங்கை எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடியில், மேலதிக டொலர்களை செலுத்த நேரிட்டால், அதனை இலங்கை மத்திய வங்கியால் சமாளிக்க முடியாமல் போலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சுற்றுலா

அதேவேளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளுக்கு அமைய 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு 82 ஆயிரத்து 327 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இவர்களில் அதிகளவானோர் ரஷ்யாவில் இருந்து வந்துள்ளனர். 13 ஆயிரத்து 478 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இது மொத்த தொகையில் 16.4 வீதமாகும். சுற்றுலாப் பயணிகள் அதிகமாக இலங்கைக்கு வந்த ஏனைய நாடுகள், இந்தியா, உக்ரைன், பிரித்தானியா மற்றும் ஜேர்மனி ஆகியனவாகும். கடந்த ஜனவரி மாதம் உக்ரைன் நாட்டில் இருந்து 7 ஆயிரத்து 774 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இது சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மொத்த தொகையில் 10 வீதமாகும்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கலாநிதி உடஹேவா, ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் இருந்தே இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அவர்கள் தொடர்ந்தும் வரப் போவதில்லை. ஏற்கனவே உக்ரைனின் வான் பரப்பு மூடப்பட்டுள்ளது. சர்வதேச விமானப் பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கொரோனா தொற்று நோயின் பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும். இதுவும் மீண்டும் அந்நிய செலாவணி நெருக்கடிக்கு வழிவகுக்கும். டொலர் கிடைக்காது. ரஷ்யா மற்றும் உக்ரைன் மாத்திரமல்ல, ஐரோப்பாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் குறையலாம். உக்ரைன் - ரஷ்ய போர் நிலைமையானது உலக யுத்தமய நிலைமை வரை நீண்டு செல்லும் வாய்ப்புகள் இருப்பதால், சிறிது காலத்திற்கு சர்வசே அரசியல் ஸ்திரமற்று போகும். இதன் காரணமாக சுற்றுலாத்துறை பெரிய பாதிப்புக்கு உள்ளாகும் எனக் கூறியுள்ளார்.

## தேயிலை

இதனிடையே இலங்கையின் தேயிலையை கொள்வனவு செய்யும் பிரதான கொள்வனவாளர்களாக ரஷ்யாவும் உக்ரைனும் உள்ளன. இதன் காரணமாக இலங்கைக்கு அந்நிய செலவாணி கிடைக்கும் மற்றுமொரு வழியும் குறுகிய அல்லது நீண்டகாலத்திற்கு இல்லாமல் போகலாம். யுத்தம் ஒன்று நடைபெறும் நேரத்தில் அவர்கள் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பார்களே அன்றி, தமது நுகர்வு தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். இலங்கையின் உற்பத்தி ஏற்றுமதி சந்தைகளான ரஷ்யா, உக்ரைன் அதேபோல் ஐரோப்பாவிலும் இலங்கை இந்த சிக்கலை எதிர்நோக்க நேரிடும் எனவும் கலாநிதி உடஹேவா குறிப்பிட்டுள்ளார். இலங்கை மற்றும் ரஷ்யா இடையிலான இருத்தரப்பு வர்த்தகத்தை 700 மில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்க இரு நாடுகளின் அதிகாரிகள் கடந்த 2020 ஆம் ஆண்டு இணக்கப்பாட்டுக்கு வந்தனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த 2017 ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு விஜயம் செய்த போது 700 மில்லியன் டொலர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 388.98 அமெரிக்க டொலர்களாக இருந்தது. ரஷ்யா, இலங்கையில் 15 வது ஏற்றுமதி சந்தை என்பது 24 வது மிகப் பெரிய இறக்குமதி சந்தையுமாகும்.

இலங்கை பிரதான ஏற்றுமதி பொருளாக ரஷ்யாவுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதுடன் ரஷ்யாவிடம் இருந்து இலங்கை சோளத்தை இறக்குமதி செய்கிறது என பொருளாதார நிபுணரான சுபாஹாசினி அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே ரஷ்யா, உக்ரைன் மீது தாக்குதலை ஆரம்பித்த பின்னர், உலக சந்தையில் ஒரு பீப்பாய் கச்சாய் எண்ணெயின் விலை 105 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. அத்துடன் சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலையானது இரண்டு வருடங்களுக்கு பின்னர் பாரியளவில் அதிகரித்தது. ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுக்க ஆரம்பித்ததும் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடாக தங்கம் மற்றும் பிளட்டினம் குறித்து கவனத்தை செலுத்தியதே இதற்கு காரணம். 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத்திற்கு பின்னர் ஒரு அவுன்ஸ் ஸ்பெட் கோல்ட் ஆயிரத்து 973.96 டொரை நெருங்கியது. பின்னர் அது ஆயிரத்து 926.51 டொலராக பதிவாகியது.

இந்த நிலையில், பலப் பரீட்சை அரசியல் பக்கமாக நோக்கினால், உக்ரைன் - ரஷ்ய மோதல் பயங்கரமானது. உக்ரைன் சம்பந்தமான ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆதரவளிக்கப்படும் என சீனா ஏற்கனவே அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்த உறுப்பு நாடுகளாக சீனாவும் ரஷ்யாவும் ஒரு அணியில் இருக்க, மறு புறம் ஏனைய நாடுகள் இருப்பதாக கலாநிதி உடஹேவா குறிப்பிட்டுள்ளார். இந்த அணி சார்ப்பு இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். பெரும்பாலும் இலங்கை சீனாவுடன் சம்பந்தப்பட்டுள்ளதால், இலங்கையால் ரஷ்யாவின் நடவடிக்கைகளை விமர்சிக்க முடியாது. இலங்கைக்கு ரஷ்யாவுடன் அதிகமான தொடர்புகள் இருப்பது இதற்கு காரணம்.

11ஆம் பக்கம் பார்க்க...

சப்தகி

# விளையாட்டு செய்திகள்

## கேப்டன் பதவியில் இருந்து விலகிய டோனி



ஐ.பி.எல். 2022 மெகா ஏலத்திற்கு முன் அணி வீரர்கள் விடுவிக்கப்பட்டனர். அப்போது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 4 வீரர்களை தக்க வைத்துக் கொண்டது. அதில் முதல் வீரராக ஜடேஜாவை தக்கவைத்தது. இதனால் டோனி கேப்டன் பதவியில் நீடிப்பது குறித்து விவாதம் எழுந்தது.

அப்போது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் டோனி கேப்டனாக செயல்படுவார் என்று தெரிவித்தது. ஐ.பி.எல். 2022 சீசன் தொடங்குகிறது.

இந்த நிலையில். இன்று டோனி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கேப்டன் பதவியில் இருந்து விலகியுள்ளார். இதை அணி நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனால் ஜடேஜா சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக செயல்பட இருக்கிறார். கேப்டன் பதவியில் இருந்த விலகினாலும் வீரராக அணியில் இடம் பிடித்து விளையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியலில் களம் இறங்கும் கிரிக்கெட் வீரர்!

மாநிலங்களவைத் தேர்தலில் ஆம் ஆத்மி வேட்பாளராக முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் உள்ளிட்டோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பஞ்சாபில் 117 இடங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தலில் 92 இடங்களைக் கைப்பற்றி ஆம் ஆத்மி வெற்றி பெற்றது. இந்நிலையில், 13 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் மார்ச் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் பஞ்சாபில் காலியாகும் 5 மாநிலங்களவை இடங்களும் அடங்கும். அந்தத் தேர்தலிலும் ஆம் ஆத்மி போட்டியிடுகிறது. அதில் ஆம் ஆத்மி வேட்பாளர்களாக ஹர்பஜன் சிங், பஞ்சாபில் உள்ள லவ்லி ஃபுரோஃபஷனல் பல்கலைக்கழக நிறுவனர் அசோக் மிட்டல், கட்சி எம்எல்ஏ ராகவ் சத்தா, டில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவன (ஐஐடி) பேராசிரியர் சந்தீப் பாதக், தொழிலதிபர் சஞ்சீவ் அரோரா ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சண்டீகரில் உள்ள பஞ்சாப் சட்டப்பேரவை வளாகத்தில் திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தனர்.

ஏற்கெனவே டில்லியிலிருந்து ஆம் ஆத்மியைச் சேர்ந்த மூவர் மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பஞ்சாப் மாநிலங்களவைத் தேர்தலில் 5 இடங்களையும் ஆம் ஆத்மி கைப்பற்றும்பட்சத்தில், மாநிலங்களவையில் அக்கட்சியின் பலம் 8 ஆக அதிகரிக்கும்.

தலித்துகளுக்கு வாய்ப்பில்லை: ஆம் ஆத்மி வேட்பாளர்கள் தேர்வை விமர்சித்து சிரோமணி அகாலிதளம் மூத்த தலைவர் ஹர்சரண் பைன்ஸ் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், "பஞ்சாப் அமைச்சரவை உருவாக்கத்தில் ஜாதி, மத உணர்வுகளுக்கு ஆம் ஆத்மி மதிப்பளித்துள்ளதாக நிறைய பேசப்பட்டது.

ஆனால், மாநிலங்களவைத் தேர்தல் வேட்பாளர் தேர்வில் நடந்தது என்ன? அந்த வேட்பாளர்களில் நால்வர் ஹிந்துக்கள் ஒருவர் சீக்கியர். ஜாட், தலித், முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை. வேட்பாளர்களில் இருவர் பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் அல்லர்" என்று தெரிவித்துள்ளார்.



## தமிழ்ப் பெண்ணை மணந்தார் பிரபல கிரிக்கெட் வீரர்!

பிரபல கிரிக்கெட் வீரர் மேக்ஸ்வெல், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வினி ராமனைத் திருமணம் செய்துள்ளார். அவுஸ்திரேலியத் தமிழ்ப் பெண் வினி ராமனை 2017 முதல் காதலித்து வருகிறார் மேக்ஸ்வெல். கடந்த வருடம் இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இந்நிலையில் கடந்த வெள்ளியன்று இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணப் புகைப்படங்களை இருவரும் சமூகவலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்கள்.

இந்தியப் பெண்ணை மணந்த 2 வது ஆஸி. கிரிக்கெட் வீரர், மேக்ஸ்வெல். இதற்கு முன்பு ஆஸி. வீரர் ஷான் டைட், மஷம் சின்ஹா என்கிற இந்தியப் பெண்ணைத் திருமணம் செய்தார். ஐபிஎல் போட்டியில் மேக்ஸ்வெல்லை ரூ. 11 கோடிக்குத் தக்கவைத்துள்ளது ஆர்சிபி அணி.






## வரலாற்றை மாற்றி எழுதிய மிதாலி – டாப்சி மிரட்டலான நடிப்பில் சபாஷ் மித்து டீசர் வெளியானது!



ஆண்களுக்கான விளையாட்டாக இருந்த கிரிக்கெட்டில் பெண்களும் சாதிக்க முடியும் என்று வரலாற்றை மாற்றி எழுதியவர் மிதாலி ராஜ். இவரது பயோபிக் தற்போது சபாஷ் மித்து என்ற பெயரில் உருவாகியுள்ளது. டாப்சி நடிப்பில் உருவாகியுள்ள இந்தப் படம் விரைவில் ரிலீசாக உள்ளது. கிரிக்கெட் போட்டிகளுக்கு சர்வதேச அளவில் வெறித்தனமான ரசிகர்கள் காணப்படுகின்றனர். இரண்டு பெரிய நாடுகளின் அணிகள் போட்டியிடுகின்றன என்றால் தங்களது தினசரி வாழ்க்கையை மறந்து ரசிகர்கள் அந்த போட்டிகளை பார்ப்பார்கள். குறிப்பாக உலக கோப்பை போன்ற போட்டிகள் அதிகமான ரசிகர்களுடன் களைக்கட்டும். இந்தப் போட்டி ஆண்களுக்கானது என்ற பிம்பம் ஆண்டாண்டுகளாக காணப்படுகிறது. இந்த பிம்பங்களை தற்போது மகளிர் கிரிக்கெட் அணிகள் உடைத்தெறிந்து வருகின்றன. ஆனால் இதை பல ஆண்டுகளுக்கு முன்பாகவே சாத்தியப்படுத்திய பெருமை சில வீராங்கனைகளையே சேரும். அந்த வகையில் இந்தியாவின் மிதாலி ராஜும் அந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

கிரிக்கெட் வீராங்கனை மிதாலி :- ஒடிஐ கிரிக்கெட்டில் தொடர்ந்து 7 முறை அரைசதங்களை அடித்தவர் இவர். நான்கு மகளிர் உலக கோப்பை தொடர்களில் கேப்டனாக இந்திய மகளிர் அணியை வழிநடத்தியவர். டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகவும் இளம் வயதில் 200 ரன்களை குவித்தவர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

மிதாலியின் பயோ பிக் :- 23 ஆண்டுகளாக இந்திய அணிக்காக இவர் விளையாடியுள்ளார். இத்தகைய பெருமைகளுக்கு சொந்தக்காரரான மிதாலி ராஜின் பயோ பிக் தற்போது சபாஷ் மிதாலி என்ற பெயரில் உருவாகியுள்ளது. இந்த படத்தில் நடிகை டாப்சி முதன்மை கேரக்டரில் நடித்துள்ளார். விரைவில் வெளியாகவுள்ள இந்தப் படத்தின் டீசர் தற்போது வெளியாகியுள்ளது.




சபாஷ் மித்து டீசர் :- இந்த டீசரில் மிதாலியின் பெருமைகள் அடுத்தடுத்து கூறப்படுகின்றன. தொடர்ந்து போட்டிக்கு தயாராகும் மிதாலி கேரக்டரில் நடித்துள்ள டாப்சி மற்றும் அவர் பாலை எய்ம் செய்வது என டீசர் சிறப்பாக செல்கிறது. தொடர்ந்து பாலிவுட்டில் சிறப்பான கதைக்களங்களில் நடித்துவரும் டாப்சிக்கு இந்தப் படமும் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# உலக பார்வை



## 75 வயது மேற்பட்டவர்களுக்கு 4 வது தடுப்பூசி!

இங்கிலாந்தில் தேசிய சுகாதார சேவை (என்.எச்.எஸ்) 75 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நபர்களுக்கான நான்காவது கொரோனா பூஸ்டர் தடுப்பூசி முன்பதிவு துவங்கியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொரோனாவால் மிகவும் பாதிக்கப்படுபவர்களுக்கு ஸ்பிரிங் பூஸ்டர் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று இங்கிலாந்தின் தடுப்பூசி மற்றும் நோய்த்தடுப்புக்கான சுயாதீன கூட்டுக் குழு(JCVI) அறிவுறுத்தி உள்ளது.

ஸ்பிரிங் பூஸ்டர் தடுப்பூசி முதியோர் மற்றும் மிகவும் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும். மேலும் கொரோனாவால் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் என்று இங்கிலாந்து சுகாதார செயலாளர் சாஜித் ஜாவிட் கூறினார்.





## சீனாவில் விபத்துக்குள்ளான விமானத்தின் கருப்பு பெட்டி கண்டுபிடிப்பு

சீனாவில் கடந்த 21-ந்திகதி விபத்துக்குள்ளான விமானத்தின் கருப்பு பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள குவாங்சி மாகாணத்திலிருந்து குவாங்சு மாகாணத்தை நோக்கி 132 பேருடன் சென்ற போயிங் 737-800 ரக விமானம் கடந்த 21-ந்திகதி விபத்துக்குள்ளானது. விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் இரண்டு நாட்களுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில், விமானத்தில் பயணம் செய்த யாரும் இதன் பிறகு உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், விமானத்திற்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதால், விபத்துக்கான காரணத்தை கண்டறிவது கடினமாக இருக்கும் என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர். விமானத்தின் கருப்பு பெட்டியை கண்டுபிடித்தால் மட்டுமே விபத்திற்கான காரணம் குறித்து கண்டறிய முடியும் என்பதால், அதனை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் விமானத்தில் இருந்த இரண்டு கருப்பு பெட்டிகளில் ஒரு கருப்பு பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கருப்பு பெட்டியில் பதிவாகி இருக்கும் விமானிகளின் உரையாடல்கள், விமானத்தின் பதிவுகள் ஆகியவை மூலம் விபத்து ஏற்பட்டதற்கான காரணத்தை கண்டறிய முடியும். எனவே, இந்த விமான விபத்துக்கான காரணம் குறித்த தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆப்கானிஸ்தான் பெண் பிள்ளைகளுக்கு விதிக்கப்பட்ட புதிய தடை

ஆப்கானிஸ்தானில் 6ஆம் தரத்திற்கு மேல் கல்வி கற்பதற்கு மாணவிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, மீள திறக்கப்பட்ட அனைத்து பெண்கள் உயர்நிலை பாடசாலைகளும் மூடப்பட்டு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றிய நிலையில் மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 07 மாதங்களுக்கு பின்னர் முதல்தடவையாக மீண்டும் திறக்கப்பட்ட பாடசாலைகள் சில மணித்தியாலங்களில் அன்று(23) மூடப்பட்டுள்ளன. இஸ்லாமிய சட்டம் மற்றும் ஆப்கானிய கலாசாரத்தின் படி ஒரு திட்டம் வரையப்படும் வரை பெண்களுக்கான பாடசாலைகள் மூடப்படும் என அந்நாட்டு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. தலிபான் ஆட்சியாளர்கள் பாடசாலை மாணவிகளுக்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தனர்.

குறித்த அறிவிப்பில் மாணவிகள் 6ஆம் தரத்திற்கு மேல் கல்வி கற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அடுத்த சில மணித்தியாலங்களில் தலிபான்கள் இந்த தீர்மானத்தை மாற்றியுள்ளனர். இதனையடுத்து 6ஆம் தரத்திற்கு மேல் கல்வி கற்க மாணவிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

## உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை 122 டொலரைக் கடந்தது

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 122 டொலரைத் தாண்டியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், அன்று (23) அமெரிக்க டபிள்யூ.டி.ஐ. எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 115.68 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நிலவும் உக்கிர யுத்தமே எரிபொருள் விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணம் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனால் ஆசிய நாடுகளிலும் எரிபொருள் விலை அதிகரித்து வருகிறது.

## ஹிட்லரின் 4 வதை முகாம்களில் இருந்து தப்பித்தவர் புதினின் ஷெல் தாக்குதலில் பலியானார்!

ஹிட்லரின் நான்கு நாஜி வதை முகாம்களில் இருந்து உயிர்தப்பிய நபர் ரஷ்யா நடத்திய ஷெல் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து 27-வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும் அவை அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன. இதனால் உக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்கள் குறிப்பாக துறைமுக நகரங்கள் மீது ரஷ்யா தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஜெர்மனி நாட்டின் முன்னாள் சர்வாதிகாரி ஹிட்லர் நடத்திய நாஜி வதை முகாம்களில் இருந்து தப்பிய 96 வயது முதியவர் ரஷ்யா நடத்திய ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். உக்ரைன் நாட்டை சேர்ந்தவர் போரிஸ் ரோமன்சென்கோ. இவருக்கு வயது 96. இவர் உக்ரைன் நாட்டின் கார்கிவ் பகுதியில் வசித்து வந்தார். கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்ய ராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் இவர் உயிரிழந்தார்.

இது குறித்து உக்ரைனின் வெளியுறவு மந்திரி டிமிட்ரோ குலேபா டிவிட்டரில் பதிவிட்டுள்ளார். "96 வயதான போரிஸ் ரோமன்சென்கோ புச்சென்வால்ட், பீனெமுண்டே, மிட்டல்பாவ்-டோரா, பெர்கன்-பெல்சன் ஆகிய நான்கு நாஜி வதை முகாம்களில் இருந்து தப்பியவர். அவர் கார்கீவில் தனது அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

ஆனால், கடந்த வெள்ளி கிழமை அன்று ரஷ்ய ராணுவத்தின் வெடிகுண்டு இவரது வீட்டில் விழுந்து இவர் உயிரிழந்தார். ஹிட்லரிடம் இருந்து உயிர் பிழைத்த இவர் தற்போது புதினால் கொல்லப்பட்டுள்ளார்." என்று தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். சர்வாதிகாரி ஹிட்லரை தனது படைகள் மூலம் சுற்றிவளைத்து அவரை தற்கொலை செய்து கொள்ளச் செய்தது இதே ரஷ்யா தான் என்பது குறிப்பிடத்தக்கது.





## ஏப்ரலுக்குள் திரும்பாதவர்களுக்கு 10 ஆண்டுகள் தடை!

மே 1 ஆம் திகதிக்குள் ரஷ்ய நாட்டின் சந்தைக்குள் நுழையாத வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 10 ஆண்டுகள் தடை விதிக்க ரஷ்ய அரசு பரிசீலித்து வருகிறது. பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத் தலைவர் ரெஷெட்னிகோவ் அனுப்பிய கடிதத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

உக்ரைன் மீதான போர் தொடங்கிய பிறகு, பல வெளிநாட்டு நிறுவனங்கள் ரஷ்யாவில் தங்களது பணியை நிறுத்திக் கொண்டதோடு, முதலீடு மற்றும் சேவைகளையும் துண்டித்துள்ளது. இதனால், ரஷ்யாவில் உள்ள ஆயிரக்கணக்கானோர், தங்களது எதிர்காலம் குறித்து தெரியாமலும், வேலை நிலையில்லாமல் தவித்து வருகிறார்கள்.

ரஷ்யாவிலிருந்து வெளியேறிய நிறுவனங்கள் மே 1 ஆம் திகதிக்குள் மீண்டும் பணிகளைத் தொடங்காவிட்டால், அந்த நிறுவனங்கள் ரஷ்யாவுக்குள் அடுத்த 10 ஆண்டுகளுக்கு வணிக ரீதியான எந்த நடவடிக்கையையும் தொடங்காத வண்ணம் தடை விதிக்கும் முடிவு பரிசீலனையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தமிழர்களுக்கு விரைவில் விடிவுகாலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும்: முதல்வர் மு.க. ஸ்டாலின்

இலங்கை தமிழர்களுக்கு விரைவில் விடிவுகாலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் அன்று (24) தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவையில் 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான பொது நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்கள் விவாதிக்கப்பட்ட நிலையில், அமைச்சர்கள் பதிலுரை வழங்கினர்.



இதையடுத்து, முதல்வர் ஸ்டாலின் பேசினார். இதன்போது, இலங்கைத் தமிழர்கள் இன்று பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் தமிழகத்திற்கு வந்துகொண்டுள்ள செய்திகளை அறிந்தேன்.

இது தொடர்பாக மத்திய அரசை தொடர்புகொண்டு இதை எப்படி கையாள வேண்டும் என சட்டரீதியாக கேட்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். அவர்களுக்கு விரைவில் விடிவுகாலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.





























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.03.2022 அன்று வெளியிடப்பட்டது.